


இறைவன் ஏன் அநியாயங்களை தடுப்பதில்லை?

# திருக்குர்ஆன் நற்செய்தி மலர்

-சமூக சீர்திருத்த மாத இதழ்-

THIRU QURAN NARCHEYDHI MALAR - 2018 MAY

மலர்: 11 இதழ்: 8 மே 2018 விலை: ரூ.10



## பெருவெடிப்பும் பிரபஞ்சத்தின் ஆரம்பமும்

● நிச்சயமாக வானங்களும், பூமியும் (முதலில்) இணைந்திருந்தன என்பதையும், இவற்றை நாமே பிரித்(தமைத்)தோம் என்பதையும், உயிருள்ள ஒவ்வொன்றையும் நாம் தண்ணீரிலிருந்து படைத்தோம் என்பதையும் சத்தியமறுப்பாளர்கள் பார்க்கவில்லையா? (இவற்றைப் பார்த்தும்) அவர்கள் நம்பிக்கை கொள்ள வில்லையா? (திருக்குர்ஆன் 21:30)

## தேனீக்களின் பாதை அறியும் திறன்!



● "மேலும், பலதரப்பட்ட பழங்களிலிருந்து சாற்றை உறிஞ்சிக் கொள்! உன் இறைவன் சீராக அமைத்துத்தந்த வழியில் சென்று கொண்டிரு!" (என்று தேனீக்கு இறைவன் அறிவித்தான்) (திருக்குர்ஆன் 16:69)

# தேனீக்கள் பற்றி திருக்குர்ஆன்

"மலைகளிலும், மரங்களிலும், மனிதர்கள் கட்டுபவற்றிலும் கூடுகளை நீ அமைத்துக் கொள்! பின்னர் ஒவ்வொரு கனிகளிலிருந்தும் சாப்பிடு! உனது இறைவனின் பாதைகளில் எளிதாகச் செல்!" என்று உமது இறைவன் தேனீக்களுக்கு அறிவித்தான். அதன் வயிறுகளிலிருந்து மாறுபட்ட நிறங்களையுடைய பானம் வெளிப்படுகிறது. அதில் மனிதர்களுக்கு நோய் நிவாரணம் உள்ளது. சிந்திக்கின்ற சமுதாயத்திற்கு இதில் தக்க சான்று உள்ளது." (திருக்குர்ஆன் 16:68-69)





பதினான்கு நூற்றாண்டுகளுக்கு முன்னர் முஹம்மது நபியவர்களுக்கு அருளப்பட்ட மேற்கண்ட திருக்குர்ஆன் வசனங்கள் இன்று நவீன அறிவியல் நிரூபித்து நிற்கும் உண்மைகளைத் தாங்கி நிற்கின்றன.


1. தேனீக்கள் பூக்களின் மூலம் மட்டுமல்ல, பழங்களிலிருந்தும் தேன் சேகரிப்பை நடத்துகின்றன.

2.. " உனது இறைவனின் பாதைகளில் எளிதாகச் செல்" என்ற வசனம், தேனீக்களின் பாதை அறியும் சிறப்புத் திறன் பற்றி கூறுகின்றது

3. அனைவரும் தேனீ வாயின் மூலமாகவோ அல்லது பின்புறத்தில் மூலமாகவோ தான் தேன் வெளியாகின்றது என்று நம்பிக் கொண்டிருந்தபோது, தேனீக்கு "வயிறு" இருக்கின்றதா, அது எப்படி இருக்கும் என்று அறியாத காலத்தில் தேனீயின் வயிற்றிலிருந்து தான் தேன் வெளியாகின்றது என்று சொல்கிறது.

4. தேனில் நோய்நிவாரணம் உள்ளது.

இவை அனைத்திலும் சிந்திக்கின்ற மக்களுக்கு இறைவனின் உள்ளமையையும் வல்லமையையும் உணர சான்றுகள் உள்ளன என்றும் இவ்வசனங்கள் கூறுகின்றன.



அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய

அல்லாஹ்வின் திருப்பெயரால்...

# திருக்குர்ஆன் நற்செய்தி மலர்

# THIRU QURAN NARCHEYDHI MALAR

மலர்: 11 இதழ்: 8 மே 2018 விலை: ரூ.10

## பொருளடக்கம்

பிரபஞ்சத்தின் ஆரம்பம் பற்றி அறிவியலும் திருக்குர்ஆனும் -2

அழகிய முறையில் கண்டிப்பு! -9

மனிதர்களுக்கு இறைவனின் தெளிவான பிரகடனம் -11

தேனீக்களின் பாதை அறியும் திறன்! -12

திருக்குர்ஆன் பற்றிய நபிமொழிகள்- 14

உங்கள் எதிர்காலம் உங்கள் தேர்வில் - 17

அநீதிகள் அடங்குவது எப்போது?- 20

நபிகளார் பரிந்துரைத்த பார்லி -22

உயிர்த்தியாகி மாஷித்தாவின் கைக்குழந்தை -23

எண்பது யானைகளை விட பழுவான மேகங்கள்

**வாசகர்கள் கவனத்திற்கு...**

- இவ்விதழைப் பெறவிரும்பும் அன்பர்கள் தங்களது தெளிவான விலாசத்தை **9886001357** என்ற எண்ணுக்கு **SMS** அனுப்பவேண்டும்.
- மாற்று மத அன்பர்களுக்கு இவ்விதழ் ஒரு வருடம் வரை அன்பளிப்பாக அனுப்பி வைக்கப்படும். தொடர்ந்து பெறவிரும்பினால் அவர்கள் **SMS** மூலம் **RESEND QNM** என்று டைப் செய்து அனுப்பவேண்டும். சந்தா அனுப்பத் தேவையில்லை.
- முஸ்லிம் அன்பர்களுக்கு 4 மாதம் வரை இவ்விதழ் இலவசமாக அனுப்பிவைக்கப்படும். தொடர்ந்து பெறவிரும்புவோர் சந்தா அனுப்ப வேண்டும்.
- ஆண்டு சந்தா **Rs.120-**
- இதழ் மொத்தமாக வேண்டுவோர், சந்தாதாரர்கள் குறைபாடுகள் தொடர்பு எண்: **08867971835**

Published from:

**House of Peace,**

PO Box no. 1726, No.501, 3rd cross, Syed Block,

AS palya Bangalore 560017

**Ph. 9886001357 email: amkasim@yahoo.com**

# பிரபஞ்சத்தின் ஆரம்பம் பற்றி அறிவியலும் திருக்குர்ஆனும்

இங்கு எடுத்தோதப் படும் திருக்குர்ஆன் வசனங்களைப் பொறுத்தவரையில் நாம் சில விடயங்களை மனதில் கொள்ளவேண்டும். இறைவேதம் திருக்குர்ஆன் பதினான்கு நூற்றாண்டுகளுக்கு முன் இறைத்தூதர் முஹம்மது நபி அவர்களுக்கு இறைவன் புறத்திலிருந்து அருளப்பட்ட வசனங்களின் தொகுப்பாகும். சுருங்கக் கூறின், மனித வாழ்க்கையின் நோக்கம், இறைவனின் உள்ளமை மற்றும் தன்மைகள், அவனோடுள்ள தொடர்பு, எவ்வாறு இந்த தற்காலிக பரீட்சை வாழ்க்கையில் மனிதன் நடக்க வேண்டும், நன்மை, தீமை, பாவம், புண்ணியம், நியாயம், அநியாயம், இறுதித்தீர்ப்பு நாள், மறுமை, சொர்க்கம், நரகம் போன்றவற்றை உரியமுறையில் எடுத்துரைத்து மனிதனை நெறிப்படுத்துவதே திருக்குர்ஆன் அருளப்பட்டதன் நோக்கமாகும். திருக்குர்ஆன் அறிவியல்(science) நூலல்ல. ஆனால் மனித ஆய்வுக்கான சான்றுகளைத் (Signs) தாங்கி நிற்கும் நூலாகும்.

ஒப்புவமையில்லா இறைவன் அற்ப ஜீவியான மனிதனோடு உரையாடும் வாசகங்களே திருக்குர்ஆன் என்பதை நாம் கவனத்தில் கொள்ளவேண்டும். உதாரணமாக கடலில் வாழும் மீனோடு கரையில் வாழும் நாம் கருத்துப் பரிமாற நாடினால் அந்த மீனின் புரிதலுக்கு உட்பட்டவாறுதானே உரையாடுவோம்? அதேபோல நம் புரிதலுக்கும் ஆய்வுக்கும் ஏற்றவாறு திருக்குர்ஆன் வசனங்கள் அமைந்திருப்பதை நாம் காணலாம்.

மட்டுமல்ல மனிதன் என்பவன் நாளுக்கு நாள் அறிவு வளர்ச்சி பெறுபவன் எனபதையும் அறிவோம். அன்று வாழ்ந்த பாலைவனத்து மக்களும் பூமியின் பிறபகுதியில் வாழ்ந்த மக்களைப் போன்றே பூமி தட்டையானது என்றும் வானம் வீட்டின் கூரை போன்ற ஒரு முகடு என்றே நம்பிக்கொண்டு இருந்தார்கள். காரணம் அறிவியல் அன்று அவ்வளவே வளர்ச்சி கண்டிருந்தது. ஆனால் இன்று அறிவியல் வளரவளர வானம் என்றால் விண்வெளி (space) என்றும் பூமியும் சூரியன் சந்திரன் போன்று கோள வடிவானது என்பதும் இந்தப் பிரபஞ்சத்தின் விரிவும் விசாலமும் எல்லாம் தெளிவாகி வருகின்றன. அன்றைய பாமர மக்களுக்கும் அதே போல இன்றைய அறிவியல் வளர்ச்சி பெற்ற காலத்து மக்களுக்கும் பொருத்தமான வகையில் அமைந்திருக்கும் அற்புதத்தை திருக்குர்ஆனின் வசனங்களில் நாம் காணலாம்.



- **(நபியே!) “வானங்களிலும், பூமியிலுமுள்ள இரகசியங்களை அறிந்தவன் எவனோ அவனே அதை (குர்ஆனை) இறக்கி வைத்தான் நிச்சயமாக அவன் மிக மன்னிப்பவனாகவும், மிக்க கிருபை செய்வோனாகவும் இருக்கின்றான்” என்று கூறுவீராக! (திருக்குர்ஆன்**

25:6)

## அறிவியல் கண்டறிந்த பிரபஞ்சத்தின் துவக்கம்


"காலம்" (Time), "இடம்" (Space) ஆகிய இரண்டுமேயில்லாத ஒரு இடத்தில், நீங்கள் இருப்பதாக உங்களால் கற்பனை செய்யமுடியுமா? இந்தக் கேள்வியே எவ்வளவு அபத்தமாக இருக்கிறது பாருங்கள். "இடம்" இல்லாத ஒரு இடத்தில் எப்படி இருக்க முடியும்? சரி, இந்தக் கேள்வியை இப்படிப் புரிந்து கொள்வோம். உங்கள் வீட்டில் நீங்கள் இப்போது இருக்கிறீர்கள். உங்கள் வீடு சென்னையில் இருக்கிறது என்று வைத்துக் கொள்வோம். சென்னையிலிருக்கும் வீட்டில் நீங்கள் இருப்பதை உங்களால் கற்பனை பண்ண முடியுமல்லவா? சென்னை, இந்தியாவில் இருக்கிறது. இந்தியா பூமியிலும், பூமி சூரியக் குடும்பத்திலும் இருக்கிறது. சூரியக் குடும்பம் பால்வெளிமண்டலத்திலும், பால்வெளிமண்டலம், பேரண்டத்திலும் இருக்கிறது. இப்பொழுது யோசித்துப் பாருங்கள். இந்தப் பேரண்டத்தில் எங்கோவொரு மூலையில் நுண்ணியதொரு புள்ளியாக நீங்கள் அமர்ந்திருக்கிறீர்கள் என்பது புரியும்.



திடீரென ஒருகணத்தில், பேரண்டமே காணாமல் போய்விடுகிறது. பூமி மட்டும் சுற்றிக் கொண்டிருக்கிறது. பூமியைத் தவிர எங்கும், எதுவும் இல்லை. இந்த நிலையைக்கூட, உங்களால் கற்பனை பண்ணிப் பார்க்க முடியும். இப்போது பூமியும் படிப்படியாக மறையத் தொடங்குகிறது. உங்களைச் சுற்றியுள்ள அனைத்துமே மறைந்து போகின்றன. இறுதியில் உங்கள் வீடும், நீங்கள் நிற்கும் தரையும் இல்லாமல் போகின்றது. ஆனால் நீங்கள் மட்டும் இருக்கிறீர்கள். உங்களைச் சுற்றியோ, மேலேயோ, கீழேயோ எதுவுமில்லை. எதுவுமில்லையென்றால், எதுவுமேயில்லை. முழுமையான வெற்றிடம்.

அதை வெற்றிடம் என்று கூடச் சொல்ல முடியாது. அப்படிச் சொன்னால் அங்கு வெற்றிடம் என்ற ஒன்று இருக்கிறது என்றாகிவிடும். அதனால் வெற்றிடம் கூட அங்கில்லை. அது என்ன நிலையென்றே சொல்ல முடியாத ஒரு நிலை. அந்த நிலையில் நீங்கள் நிற்கிறீர்கள். எந்தச் செயலையும் செய்ய முடியாத ஒரு உறைந்த நிலையாக அது இருக்கும். நீங்கள் நடக்க முடியாது. நடப்பதற்குத்தான் இடமில்லையே! பார்க்க முடியாது. பார்ப்பதற்கு ஒளியுமில்லை, பொருட்களுமில்லை. பேச முடியாது. பேச்சைக் கடத்தும் காற்று அங்கில்லை. அதேபோல, எதையும் கேட்கவும் முடியாது. மொத்தத்தில் எதுவும் செய்ய முடியாது. அங்குக் காலம் (நேரம்) என்பது கூட இல்லை. காலம் என்பதற்கான எந்த அர்த்தமும் அங்கில்லை. இப்போது முதலில் நான் கேட்டிருந்த கேள்வியை மீண்டும் பாருங்கள். காலம், இடம் இரண்டுமில்லாத ஒரு நிலையில் நீங்கள் இருப்பதாக உங்களால் கற்பனை செய்ய முடிகிறதா? கற்பனை செய்து பார்க்கவே முடியவில்லையல்லவா? ஆனால் கற்பனையே பண்ணமுடியாத

அப்படியானதொரு நிலை உண்மையில் இருந்துதானிருக்கிறது என்கிறது அறிவியல்.




**பிக்பாங்க் (Bigbang)**

நாம் இன்று வாழ்ந்துகொண்டு இருக்கும் பேரண்டத்தின் துவக்கம் அங்கிருந்துதான். அந்த நிலையில் பேரண்டம், ஒரு அணுவைவிடச் சிறிய புள்ளியாகச் சுருங்கி இருந்திருக்கிறது. பேரண்டம் சிறுபுள்ளியாகச் சுருங்கியிருந்த நிலையை “ஒருமை நிலை“ (Singularity) என்று விஞ்ஞானிகள் சொல்கிறார்கள். அவ்வாறு மிகமிகச்சிறியதொரு புள்ளியாக ஒடுங்கியிருந்த ஏதோவொன்று, ஒரு குறித்த கணத்தில் திடீரெனப் பிரமாண்டமாக வெடித்துச் சிதறியது. வெடிப்பு என்றால் வெடிப்பு. மனிதனால் கற்பனையே பண்ணிக் கொள்ள முடியாதவொரு பெருவெடிப்பு. கோடானகோடி அணுகுண்டுகளை ஒன்றாய்ச் சேர்த்து வெடித்தது போல இருந்த அந்தப் பெருவெடிப்பைத்தான் “பிக்பாங்க்“ (Bigbang) என்கிறார்கள். வெடித்த அடுத்த நொடியிலேயே அது பேரண்டமாக விரிவடைந்தது. மிகச் சிறியதொரு புள்ளி ஒரு நொடிக்கும் குறைந்த நேரத்துக்குள் பேரண்டமாக விரிவடைந்தது.

**● (அன்றி) அவனே வானங்களையும் பூமியையும் முன்மாதிரியின்றியே படைத்தவன். அவன் எதைப் படைக்கக் கருதினாலும் அதனை ”ஆகுக!” எனக் கூறிய மாத்திரத்தில் உடனே அது ஆகிவிடுகிறது. (திருக்குர்ஆன் 2:117)**

அறிவியல் ஆய்வுகளின் படி ஒவ்வொரு நிகழ்வுகளும் கட்டங்களும் ஒரு குறிப்பிட்ட கால அளவைக்குள் நடப்பதாக கண்டறியப்படுகின்றன. ஆனால் காலத்தையும் இடத்தையும் படைத்தவன் இந்த விதிமுறைகளுக்கு கட்டுப்படாதவன். அவனைப் பொறுத்தவரையில் ‘ஆகு’ என்ற ஒரு கட்டளை போதுமானது. (இதையே “வார்த்தை’ என்கிறது பைபிள்). அனைத்துப் பக்குவங்களோடும் பின்னணிகளோடும் அது ஆகிவிடுகிறது.


பெருவெடிப்பு பற்றிய குறிப்பை இறைவேதம் திருக்குர்ஆனில் காணலாம்:

**●நிச்சயமாக வானங்களும், பூமியும் (முதலில்) இணைந்திருந்தன என்பதையும், இவற்றை நாமே பிரித்(தமைத்)தோம் என்பதையும், உயிருள்ள ஒவ்வொன்றையும் நாம் தண்ணீரிலிருந்து படைத்தோம் என்பதையும் சத்தியமறுப்பாளர்கள் பார்க்கவில்லையா? (இவற்றைப் பார்த்தும்) அவர்கள் நம்பிக்கை கொள்ள வில்லையா? (திருக்குர்ஆன் 21:30)**

## தொடரும் பிரபஞ்ச விரிவாக்கம்

பெருவெடிப்பின் வீரியத்தால் விரிவடையத்தொடங்கிய பேரண்டம் இப்போதும் விரிவடைந்து கொண்டிருக்கிறது என்பதை 1929ம் ஆண்டில் "எட்வின் ஹபிள்" (Edwin Hubble) என்பவர் கண்டுபிடித்தார். தொலைநோக்கிக் கருவியினால் விண்வெளியை ஆராய்ந்து கொண்டிருந்த ஹபிள், அண்டத்தின் எல்லையில் காணப்பட்ட "காலக்ஸிகள்" (Galaxies) ஒன்றையொன்று விலகிச் செல்வதை அவதானித்தார். பலூன் ஒன்றில் பேனாவின் மூலம் சுற்றிவரப் புள்ளிகளையிட்டுப் பின்னர் அந்தப் பலூனைப் படிப்படியாகப் பெரிதாக ஊதும்போது, அதில் உள்ள புள்ளிகள் எப்படி ஒன்றை ஒன்று விட்டு விலகிச் செல்லுமோ அப்படி, அண்டத்தின் எல்லைகளில் இருக்கும் காலக்ஸிகளும் விலகிச் செல்கின்றன என்று கண்டுபிடித்தார்.

மிகத் தொலைவிலிருந்து வரும் ஒளி, நம்மை நோக்கி வந்தால் அது நீலநிறமாகவும், விலகிச் சென்றால் சிவப்பு நிறமாகவும் ஒளிப்பிரிகையடையும் என்னும் கருதுகோள் ஒன்று உண்டு. அதைச் "செந்நிற விலகல்" (Red Shift) என்று சொல்வார்கள். ஹபிள், நட்சத்திரக் கூட்டங்களை அவதானித்தபோது, அவை சிவப்பு நிற ஒளியுடன் விலகுவது தெரிந்தது. தற்கால விண்வெளி ஆராய்ச்சி விஞ்ஞானிகளும் இதைச் சூப்பர் நோவாக்களின் (Supernova) விலகலை வைத்து உறுதிசெய்து கொண்டார்கள்.




## தொடரும் விரிவாக்கமும் அதிர்ச்சியும்

அண்டம் இன்றும் விரிவடைந்து செல்வதற்கு ஆரம்பப் பெருவெடிப்பின் வீரியம்தான் காரணம் என்று நம்பி வந்த விஞ்ஞானிகளுக்குப் பேரதிர்ச்சியொன்று காத்திருந்தது. பெருவெடிப்பின் வீரியம் எந்த அள்வு பெரிதாக இருந்தாலும், என்றாவது ஒருநாள் அது பூச்சியமாக வந்துதான் ஆக வேண்டும் என்று விஞ்ஞானிகளுக்குத் தெரியும். ஒரு கிரிக்கெட் பந்தை என்னதான் பலம் கொண்ட அளவுக்கு மேல்நோக்கி எறிந்தாலும், புவியீர்ப்பு விசைக்கெதிராக மேலே செல்லும் பந்து, ஒரு குறித்த இடம்வரை சென்று, மீண்டும் ஈர்ப்புவிசையால் கீழே விழ ஆரம்பிக்கும். அதுபோல, பெருவெடிப்பினால் ஏற்பட்ட விரிவும் ஒரு நாள் தன் எல்லையை அடைய வேண்டும் என்று விஞ்ஞானிகள் நம்பினார்கள். அதன்பின்னர், அண்டத்தில் உள்ள காலக்ஸிகளின் ஈர்ப்புவிசையினால், அவை ஒன்றையொன்று இழுக்க, மீண்டும் அண்டம் சுருங்க ஆரம்பிக்கும். அப்படிப் படிப்படியாகச் சுருங்கி மீண்டும் ஆரம்பப் புள்ளியின் நிலையை அண்டம் அடையும் என்று கருதினார்கள். இதற்குப் "பெரிய சுருக்கம்" (Big Crunch) என்று பெயரும் வைத்திருக்கிறார்கள்.

## விஞ்ஞானிகளுக்கு காத்திருந்த ஆச்சரியம்

நவீன தொலைநோக்கிக் கருவிகள்மூலம் பெருவெடிப்பின் விரிவு நடந்த காலங்களைப் படிப்படியாக ஆராய்ந்து கொண்டு வந்த போதுதான் அந்த ஆச்சரியத்தை விஞ்ஞானிகள் கண்டுகொண்டனர். பெருவெடிப்பின் பின்னர் உருவான கோடிக்கணக்கான காலக்ஸிகளெல்லாம் அண்டத்தின் விரிவால் விலகிச் சென்ற போதும், காலக்ஸிகளுக்குள் இருக்கும் நட்சத்திரங்களும், கோள்களும் தமக்குள் விலகாமல், ஒரு ஈர்ப்புவிசையுடன் பிணைக்கப்பட்டு. ஒன்றாகவே இருந்து வந்தன. அப்படியொரு விலகல் ஏற்படுமேயானால், பூமி எப்போதோ சூரியனை விட்டு விலகிச் சென்றிருக்கும், அல்லது சூரியன் வேறு நட்சத்திரத்துடன் மோதியிருக்கும். ஆனால், ஒவ்வொரு காலக்ஸியையும் ஒன்றாக இணைத்தும், அதை விண்வெளியுடன் சேர்த்தும், ஏதோ ஒரு சக்தி




வைத்திருப்பதை விஞ்ஞானிகள் அவதானித்தனர்.

அந்தச் சக்தி எதுவென்றே ஆரம்பத்தில் தெரியவில்லை. ஆனால் கண்ணுக்குத் தெரியாத கருமையான ஒரு சக்தியாகவே, அந்தச் சக்தி இருப்பது மட்டும் புரிந்தது. இந்த நேரத்தில்தான் ஐன்ஸ்டைன் கண்டுபிடித்துச் சொல்லிய ஒரு முக்கியமான கண்டுபிடிப்பு விஞ்ஞானிகளுக்கு உதவியது. விண்வெளியில் இருப்பவைகளின் ஈர்ப்புவிசையின் பலத்தினால், ஒளிகூட வளையும் என்று சொல்லியிருந்தார். இதை "ஈர்ப்பு வில்லை" (Gravitational Lensing) என்பார்கள். இதை வைத்துக் கொண்டு விண்வெளியை ஆராய்ந்தபோது, கறுப்பு நிறத்திலான ஏதோ ஒன்று காலக்ஸிகளை ஒன்று சேர்த்து வைத்திருப்பதைக் கண்டு கொண்டார்கள். அந்தக் கருப்பு

நிறப்பொருளையே “கரும்பொருள்“ (Dark Matter) என்று பெயரிட்டு அழைக்கின்றனர். பேரண்டம் முழுவதும் 23% அளவில் இந்தக் கருப்பு சக்தி பரவியிருப்பதை இப்போது கணித்திருக்கிறார்கள். வாயகன்ற ஒரு பாத்திரத்தில் மோட்டார் வாகனத்துக்குப் பயன்படுத்தும் டீசல் எண்ணெய்யை ஊற்றிவிட்டு, அதன் மேற்பரப்பில் மரத்தூளை நீங்கள் தூவினால், எப்படிக் கருத்த டீசல் எண்ணெய் அந்த மரத்தூள்களை சேர்த்து வைத்திருக்கிறதோ, அப்படிக் கரும்பொருளும், காலக்ஸிகளை தன்னுடன் இழுத்து வைத்தபடி இருக்கின்றது. நவீன தொலைநோக்கிகள்மூலம் அவதானித்தபோது, பெருவெடிப்பின் பின், இந்த டார்க் மாட்டரானது காலக்ஸிகளை ஒன்றாக இழுத்து வைத்து அண்டத்தைச் சீராக விரிவடையச் செய்துகொண்டிருந்தது. ஆனால், இந்தச் சீரான விரிவு 9 பில்லியன் ஆண்டுகள் வரைதான் இருந்தது. அதன் பின்னர் நடந்தது இன்னுமொரு பேராச்சரியம்.

விண்வெளி விரிவதை ஆராய்ந்து கொண்டிருந்த விஞ்ஞானிகள் பெரும் ஆச்சரியத்தைத் திடீரெனக் கண்டுகொண்டார்கள். அண்டத்தின் எல்லையில் உள்ள காலக்ஸிகள் சிலவற்றில் காணப்பட்ட சுப்பர்நோவா நட்சத்திரங்களுக்கு இடையேயுள்ள தூரங்களை அளந்து எடுத்துக் கொண்டார்கள். அவற்றைக் குறிப்பிட்ட கால இடைவெளிகளில் மீண்டும் மீண்டும் அளந்து கொண்டு வந்தபோது, அந்த ஆச்சரியம் உறுதிசெய்யப்பட்டது. அதாவது, பேரண்டமானது ஒரு குறித்த வேகத்தில் விரிவடைவதற்குப் பதிலாக வேகவளர்ச்சியுடன் (Acceleration) கூடிய மிகை வேகத்துடன் விரிந்து கொண்டே போய்க்கொண்டிருக்கிறது. ஒரு பந்தை, வானத்தை நோக்கி எறிந்தால், அந்தப் பந்தின் வேகம் படிப்படியாகக் குறைந்து பூச்சியமாக வேண்டுமல்லவா? அதற்கு மாறாக, அந்தப் பந்து மேலும் மேலும் வேகவளர்ச்சியடைந்து மேல் நோக்கிச் சென்று கொண்டேயிருப்பது நம்பமுடியாத ஒன்றல்லவா?

தொலைநோக்கிக் கருவிகள் மூலம் இதை ஆராய்ந்து பார்த்தபோது, கடந்த நான்கு பில்லியன் வருடங்களாகத் திடீரென இந்த வேகவளர்ச்சி அண்டத்தில் ஏற்பட்டிருப்பது தெரிந்தது. அது எப்படி? எது இந்த வேக வளர்ச்சியைக் கொடுக்கிறது? “டார்க் மாட்டர்“ காலக்ஸிகளை ஒன்றாக இழுத்து வைத்துக் கொண்டிருக்கும்போது, இன்னுமொரு சக்தி அவற்றை வேகவளர்ச்சியுடன் விலகச் செய்கிறதே! இந்த ஆச்சரியத்துக்கு என்ன காரணம்? யாருக்குமே இன்றுவரை விடை தெரியாத மர்மம் இது.

பிரபஞ்ச விரிவு பற்றி படைத்தவன் கூற்றை நாம் இங்கு நினைவு கூருவோம்.


● **மேலும், நாம் வானத்தை (நம்) சக்தி கொண்டு அமைத்தோம் நிச்சயமாக நாம் விரிவாக்கும் ஆற்றலுடையவராவோம். (திருக்குர்ஆன் 51:47)**

## கரும்சக்தி மற்றும் கரும்பொருள்

அண்டத்தை வேகமாக விரிவடையச் செய்யும் அந்தச் சக்தியைத்தான் “கரும்சக்தி“ (Dark Energy) என்கிறார்கள் விஞ்ஞானிகள். இந்தக் கரும்சக்தி, அண்டம் எங்கும் பரவி, அண்டத்தை நினைக்கவே முடியாத அளவு

பெரிதாக்கி, முடிவிலியை நோக்கி விரிவடைந்து கொண்டேயிருக்கிறது. இந்தச் சக்தியின் விரிவும் ஒரு நாள் முடிவடைந்து மீண்டும் குறைவடையுமா? அல்லது மேலும் மேலும் விரிவடைந்து கொண்டு போய், ஒரு நிலையில் அந்த விரிவைத் தாங்க முடியாமல், அண்டம் மீண்டும் கட்டுடைந்து உறைந்து போகுமா? எதுவும் தெரியவில்லை. இப்படி விரிவடைந்து கொண்டு சென்று ஒருநாள் அதன் தாக்கம் தாங்க முடியாமல் உருக்குலைந்து போவதை, "பெரும் குளிர்ச்சி" (Big Chill) என்கிறார்கள்.

கரும்பொருள், கரும்சக்தி ஆகிய இரண்டுமே இன்றைய விஞ்ஞானிகளுக்குச் சவால் விடும் இரண்டு சக்திகள், இதுவரை இவை எவையென மனிதனால் கண்டுபிடிக்கவே முடியவில்லை. அதுவாக இருக்கலாம், இதுவாக இருக்கலாம் என்ற சந்தேகங்கள் மட்டும்தான் உள்ளனவேயொழிய, உண்மையில் இவை என்னவென்று தெரியவே தெரியாது. இன்றுள்ள கணிப்பின்படி, அண்டம் முழுவதும் உள்ள நட்சத்திரங்கள், கோள்கள், காலக்ஸிகள், கருந்துளைகள், க்வேஸார்கள் இன்னபிற பொருட்களெல்லாம் சேர்ந்து, அண்டத்தின் 4% அளவும், கரும்பொருள் என்னும் டார்க் மாட்டர் 23% அளவும், கரும்சக்தி எனப்படும் டார்க் எனர்ஜி 73% ஆகக் காணப்படுகின்றன.




● **நிச்சயமாக வானங்களும் பூமியும் அவை இரண்டும் விலகி விடாதவாறு நிச்சயமாக அல்லாஹ்வே தடுத்துக் கொண்டிருக்கின்றான் அவை இரண்டும் விலகுமாயின், அதற்குப் பிறகு வேறெவரும் அவ்விரண்டையும் தடுத்து நிறுத்தமுடியாது. நிச்சயமாக அவன் பொறுமையுடையவன் மிக மன்னிப்பவன். (திருக்குர்ஆன் 35:41)**

**(அல்லாஹ் என்றால் 'வணக்கத்திற்குத் தகுதிவாய்ந்த ஒரே இறைவன்' என்பது பொருள்)**

ஜப்பானில் உள்ள டோக்கியோ வானியல் ஆய்வுக்கூட இயக்குனர் யுஷிதி கூஷன் (Yushidi Kusan) அவர்களின் கூற்று இங்கு கவனத்திற்குரியதே:

"குர்ஆனில் வானியல் தொடர்பான உண்மைகள் இருப்பதைக் கண்டு நான் மிகவும் வியப்படைகிறேன். கவரப்படுகிறேன். நவீன வானியல் ஆராய்ச்சியாளர் களாகிய நாங்கள் இப்பிரபஞ்சத்தின் மிகச்சிறிய பகுதியைத்தான் ஆராய்ந்து வருகிறோம். ஒரு சிறிய பகுதியைப் புரிந்துகொள்வதன் மீதுதான் நாங்கள் எங்கள் முயற்சிகளையெல்லாம் குவிக்கிறோம். ஏனெனில் தொலைநோக்கிகள் வழியாக வானத்தின் ஒரு சில பகுதிகளைத்தான் எங்களால் பார்க்க முடியும். முழு பிரபஞ்சத்தையும் பற்றியெல்லாம் நினைக்கவே முடியாது. குர்ஆனைப் படிப்பதன் மூலமும் கேள்விகளுக்கு பதில் காணுவதன் மூலமும் இந்த பிரபஞ்சத்தைப் பற்றிய எனது ஆராய்ச்சியின் எதிர்கால வழியை என்னால் காணமுடியும் என்று கருதுகிறேன்."

அறிவியல் தகவல்கள்: http:// writerrajsiva.blogspot.in

# அழகிய முறையில் கண்டிப்பு!

மாணவர்கள் தவறு செய்யும்போது கண்டித்துத் திருத்த வேண்டியது ஆசிரியர் மீதும் பெற்றோர் மீதும் கடமையாகும். அதை எவ்வாறு அழகிய முறையில் நிறைவேற்றுவது?

இறைவன் நமக்களித்த முன்மாதிரியாம் அண்ணல் நபிகளாரிடமிருந்தே பாடம் பெறுவோமே! அவர் வாழ்வில் நடந்த சில சம்பவங்களைப் பாருங்கள்:

## புனிதத் தலத்தில் சிறுநீர் கழித்தவர்

● நபித்தோழர் அபூஹுரைரா (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:

இறைத்தூதர் (ஸல்) அவர்கள் அமர்ந்திருக்கும் போது, ஒரு கிராமவாசி பள்ளிக்குள் நுழைந்து, "இறைவா! எனக்கும் முஹம்மதுக்கும் மன்னிப்பை வழங்குவாயாக! எங்களுடன் சேர்த்து வேறு யாருக்கும் நீ மன்னிப்பளிக்காதே!" என்று சொன்னார். இறைத்தூதர் (ஸல்) அவர்கள் உடனே சிரித்து விட்டார்கள். "இறைவனின் விசாலமான தன்மைக்கு நீ தடை விதிக்கின்றாயே!" என்று கூறினார்கள்.

பிறகு அவர் பள்ளியின் ஓரத்தில் ஆடையை அகற்றி சிறுநீர் கழிக்கலானார். (தான் தவறு செய்து விட்டோம் என்று) அவர் உணர்ந்த பின் என்னருகில் வந்து நின்று கொண்டு, "அவர்கள் கடுமையாக எச்சரிக்கவில்லை. ஏசவில்லை" என்று சொன்னார். அப்போது நபி (ஸல்) அவர்கள், "இது பள்ளிவாசலாகும். இதனுள் சிறுநீர் கழிக்கப் படலாகாது. இது அல்லாஹ்வை நினைவு கூர்வதற்காகவும் தொழுவதற்காகவுமே கட்டப் பட்டுள்ளது" என்று கூறி ஒரு வாளி தண்ணீர் கொண்டு வர உத்தரவிட்டார்கள். அது அவரது சிறுநீரில் ஊற்றப்பட்டது. (நூல் : இப்னுமாஜா 522)

இதுபற்றிய வேறு ஒரு அறிவிப்பில் இவ்வாறு வருகிறது:

● ஒரு கிராமவாசி பள்ளிவாசலில் சிறுநீர் கழித்து விட்டார். உடனே மக்கள் அவரைப் பிடித்தனர். நபி (ஸல்) அவர்கள், "அவரை விட்டு விடுங்கள். அவர் கழித்த சிறுநீர் மீது ஒரு வாளி தண்ணீரை ஊற்றி விடுங்கள். நீங்கள் நளினமாக எடுத்துச் சொல்லக் கூடியவர்களாக அனுப்பப் பட்டுள்ளீர்கள். கடினமாக எடுத்துச் சொல்பவர்களாக நீங்கள் அனுப்பப் படவில்லை" என்று கூறினார்கள். அறிவிப்பவர் : அபூஹுரைரா (ரலி), நூல் : புகாரி 220

பாருங்கள், பள்ளிவாசலில் சிறுநீர் கழித்து விட்டதால் தன்னை நபி (ஸல்) அவர்கள் கண்டிப்பார்கள் என்று அந்தக் கிராமவாசி எதிர்பார்க்கின்றார். ஆனால் அவர் எதிர்பார்த்தது போல் எதுவும் நடக்கவில்லை. அதே சமயம் அந்தக் கிராமவாசியை நோக்கிப் பாயும் மக்களிடம் நபி (ஸல்) அவர்கள் நளினத்தைப் போதிக்கின்றார்கள்.

தவறு செய்த மாணவர்களை மற்றவர்கள் முன்னால் கடுமையாக அவமானப்படுத்தும் பழக்கம் பல ஆசிரியர்களுக்கு உண்டு. அத்தகையவர்களுக்கு இறைத்தூதர் (ஸல்) அவர்களின் இந்த நடைமுறையில் அழகிய படிப்பினை உள்ளது.

## பணியாள் போற்றும் எஜமானர்

தனது சிறு வயது முதலே நபிகளாருக்குப் பணிவிடை செய்வதில் ஈடுபட்டிருந்த அனஸ் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

இறைத்தூதர் (ஸல்) அவர்கள் தமக்குப் பணியாள் எவரும் இல்லாத நிலையில் மதீனாவுக்கு வந்தார்கள். ஆகவே அபூதல்ஹா (ரலி) அவர்கள் என் கையைப் பிடித்துக் கொண்டு இறைத்தூதர் (ஸல்) அவர்களிடம் அழைத்துச் சென்று, "இறைவனின் தூதரே! அனஸ் புத்திசாலியான சிறுவன். அவன் தங்களுக்கு ஊழியம் செய்யட்டும்" என்று கூறினார்கள். ஆகவே நான் நபி (ஸல்) அவர்களுக்குப் பிரயாணத்திலும் ஊரில் இருக்கும் போதும் பணிவிடைகள் செய்து வந்தேன். நான் செய்த எந்தச் செய்கைக்காகவும் "இதை ஏன் இப்படிச் செய்தாய்?" என்றோ, நான் செய்யாத எந்த விஷயத்திற்காகவும் "இதை ஏன் நீ இப்படிச் செய்யவில்லை" என்றோ என்னிடம் நபி (ஸல்) அவர்கள் கேட்டதேயில்லை. (நூல் : புகாரி 2768)

அனஸ் (ரலி) அவர்கள் நபி (ஸல்) அவர்களிடம் பத்து ஆண்டுகள் பணிபுரிந்துள்ளார்கள். இந்தப் பத்தாண்டு காலத்தில் ஏதேனும் பிசகுதல் இல்லாமல் இருந்திருக்க முடியாது. ஆயினும் நபி (ஸல்) அவர்களின் மென்மையான அணுகுமுறையினால் அது சரி செய்யப்பட்டிருக்கும் என்பதை நாம் விளங்க முடிகின்றது.

அழகிய அணுகுமுறைகளை உலகுக்குக் கற்றுத் தருவதற்காக இறைவனால் அனுப்பப்பட்ட ஆசிரியர் நபிகளார். அவர்களின் அழகிய கண்டிப்பு முறைக்கு இன்னோர் எடுத்துக்காட்டைப் பாருங்கள்:

ஒரு இறைவிசுவாசி தும்மினால் அவர் அல்ஹம்து லில்லாஹ் (புகழனைத்தும் இறைவனுக்கே) என்று கூறுவதும் அதைக் கேட்டவர் "யர்ஹமுகுமுல்லாஹ் - (அல்லாஹ் உங்களுக்கு அருள் செய்வானாக)" என்று மறுமொழி கூறுவதும் நபிகளார் கற்றுத் தந்த வழிமுறைகளில் ஒன்று. முஆவியா பின் ஹகம்(ரலி) என்ற நபித்தோழர் இவ்வாறு கூறுகிறார்கள்:

நான் இறைத்தூதர் (ஸல்) அவர்களுடன் தொழுது கொண்டிருக்கும் போது கூட்டத்தில் ஒருவர் தும்மினார். உடனே நான், "யர்ஹமுகுமுல்லாஹ் - அல்லாஹ் உங்களுக்கு அருள் செய்வானாக" என்று சொன்னேன். உடன் மக்கள் என் மீது தங்கள் பார்வைகளைச் செலுத்தினர். "(உங்கள்) தாய் தொலைந்து போகட்டும்! உங்கள் செய்தி என்ன? என்னையே பார்க்கின்றீர்களே!" என்று நான் கேட்டேன். அதற்கு நபித்தோழர்கள் என்னை (கண்டிக்கும் விதமாக) தங்கள் தொடைகளில் கைகளால் அடித்துக் காட்டினர். அவர்கள் என்னைப் பேசாமல் இருக்கச் சொல்கின்றார்கள் என்று அறிந்து மவுனமாகி விட்டேன்.

இறைத்தூதர் (ஸல்) அவர்கள் தொழுது முடித்ததும் கடுமையாகக் கண்டிப்பார்கள் என்று நினைத்தேன். என் தாயும் தந்தையும் அவர்களுக்கு அர்ப்பணமாகட்டும். அவர்களை விட அழகிய முறையில் போதிக்கும் ஓர் ஆசிரியரை அவர்களுக்கு முன்னரும் பின்னரும் நான் கண்டதே இல்லை. இறைவன் மீதாணையாக! அவர்கள் என்னை அரற்றவில்லை. என்னை அடிக்கவில்லை. என்னை ஏசவுமில்லை. "நிச்சயமாக இது தொழுகை! இதில் மக்கள் பேச்சு எதுவும் பேசுதல் முறையாகாது. நிச்சயமாக

தொழுகை என்பது தஸ்பீஹ் (துதிச்சொற்கள்), தக்பீர்(இறைவனைப் பெருமைப் படுத்துதல்), குர்ஆன் ஓதுதல் என்பது மட்டும் அடங்கியதாகும்“ என்று கூறினார்கள். (நூல் : முஸ்லிம் 836)

இந்த ஹதீஸை அறிவிக்கும் முஆவியா பின் ஹகம் (ரலி) தொழுகையில் தான் பேசிய பேச்சுக்காக நபி (ஸல்) அவர்களிடம் சரியாக வாங்கிக் கட்டப் போகின்றோம் என்று கனமான உள்ளத்தோடு காத்திருக்கின்றார்கள். ஆனால் நபி (ஸல்) அவர்களோ அவர் செய்த அத்துமீறல்கள் எதையும் நேரடியாக கண்டிக்காமல் திருத்திக்கொள்ள வேண்டிய விடயங்களை மட்டும் தெரிவித்து விடுகிறார். உடன்பாட்டு மறையாக, பாஸிடிவாக எதைச் சொல்ல வேண்டுமோ அதை மட்டும் சொல்லி முடிக்கின்றார்கள்.

# மனிதர்களுக்கு இறைவனின் தெளிவான பிரகடனம்

படைத்த இறைவனின் வழிகாட்டுதலுக்குக் கீழ்படிந்து வாழுதலே இஸ்லாம் எனப்படும். அவ்வாறு வாழ்வோருக்கு இவ்வுலகிலும் அமைதி உண்டாகும். மறுமையில் சொர்க்க வாழ்வு கிட்டும். இறைவனின் வழிகாட்டுதலை அலட்சியம் செய்து புறக்கணிப்போருக்கு இவ்வுலகிலும் அமைதியின்மை உண்டாகிறது. இறைவனுக்கு செய்யும் நன்றிகேட்டுக்குப் பகரமாக மறுமையில் நரக தண்டனையும் கிடைக்கிறது. இந்த சத்தியத்தை மக்களுக்கு நினைவூட்டி வழிகாட்டவே இறைவனின் தூதர்கள் வந்தார்கள். அந்த தூதர்களின் பரம்பரையில் இறுதியானவரே முஹம்மது நபி (ஸல்) அவர்கள். அவர் மூலமாக அருளப்பட்ட வேதம் திருக்குர்ஆனில் ஒளிவுமறைவு இல்லாத தெளிவான பிரகடனத்தைக் காணலாம்:

- **18:29. (நபியே நீர்) தெளிவாகக் கூறிவிடும்: இது உங்கள் இறைவனிடமிருந்து வந்துள்ள சத்தியமாகும். இனி நம்பிக்கை கொள்ள விரும்புவோர் நம்பிக்கை கொள்ளட்டும் மறுக்க விரும்புவோர் மறுக்கட்டும்! (மறுக்கக்கூடிய) கொடுமையாளர்களுக்குத் திண்ணமாக நாம் ஒரு நெருப்பைத் தயார் செய்து வைத்திருக்கிறோம். அதன் சுவாலைகள் அவர்களைச் சுற்றி வளைத்தாகிவிட்டன. அங்கு அவர்கள் தண்ணீர் கேட்பார்களாயின், உருக்கிய உலோகம் போன்ற நீர் அவர்களுக்குக் கொடுக்கப்படும். அது அவர்களின் முகங்களைக் கரித்துவிடும். அது மிகவும் கேடு கெட்ட பானம் ஆகும். மேலும், அவர்களின் ஓய்விடம் தீயதாகும்.**
- **18:30. எவர்கள் இறைநம்பிக்கை கொண்டு நற்செயல் புரிகின்றார்களோ அத்தகைய அழகிய செயல் புரிவோரின் கூலியை நிச்சயமாக நாம் வீணாக்குவதில்லை.**
- **18:31. அவர்களுக்கு நிலையான சுவனங்கள் இருக்கின்றன. அவற்றின் கீழே ஆறுகள் ஓடிக்கொண்டிருக்கும். அங்கு அவர்களுக்குத் தங்கக் காப்புகள் அணிவிக்கப்படும். மேலும், மெல்லிய மற்றும் அழுத்தமான பச்சை நிறப் பட்டாடைகளையும் அணிவார்கள். மேலும், உயர்ந்த மஞ்சங்கள் மீது சாய்ந்திருப்பார்கள். இது மிகச்சிறந்த நற்கூலியும், மிக உயர்ந்த தங்குமிடமுமாகும்.**

<u>சூப்பர் கம்ப்யூட்டர்களையும் மிஞ்சும் தேனீக்கள்</u>

# தேனீக்களின் பாதை அறியும் திறன்!

புகழ் பெற்ற ஒரு உணவகத்தில் மத்திய உணவை டோர் டெலிவரி ஆர்டர் செய்கிறீர்கள். உங்களைப் போல் பலரும் ஆர்டர் செய்வார்கள். டெலிவரி செய்யும் நபர், அனைத்து முகவரியையும் கணினியில் கொடுத்தால் அனைத்துப் பாதைகளின் தூரத்தையும் ஆராய்ந்து, எல்லா வாடிக்கையாளர்களுக்கும் டெலிவரி செய்து வர பாதையைக் கொடுக்கும்.



ஆனால் கடுகின் அளவே உள்ள தேனீயின் மூளை எந்த வித கணினியின் உதவியும் இல்லாமல் உடனே கணக்கிடுவது எப்படி?

தற்போதுள்ள மிகச் சிறந்த கணினிக்கு கூட, இந்த விடயம் மிகவும் சிக்கலாக, பல நாட்கள் எடுத்து கணிக்கக் கூடிய ஒரு செயலாக இருந்தபோதிலும் கடுகளவு உள்ள தேனீயின் மூளைக்கு இது ஒரு சாதாரண சாதனை அல்ல.

"இயற்கையில் தேனீக்கள், தங்களின் பயண தூரத்தைக் குறைக்கவும், எந்தவித தடங்கலும் இல்லாமல் வீடு திரும்பவும், போகும் பாதையில் உள்ள நூற்றுக்கணக்கான பூக்களை வரிசைப்படுத்திக் கொள்ளும்", என்று பேராசிரியர் லார்ஸ் சிட்கா (Professor Lars Chittka from Queen Mary's School of Biological and Chemical Sciences, University of London) கூறியுள்ளார்.

எளிதாக வழிகளைக் கண்டுபிடிப்பது என்பது குறுக்கு வழிகளை மட்டும் குறிக்காது. சரியான வழியையும் கண்டுபிடித்தால் தான் எளிதாக இருக்கும். கணினியின் தொடர்புள்ள செயற்கை பூக்களை ஆய்வகத்தில் உருவாக்கி தேனீக்கள் எப்படி பாதையை தேர்வு செய்கின்றன என்று கண்காணித்தனர். பூக்கள் இருக்கும் பாதையில் வரிசையாக பயணம் செய்யாமல், அவைகளை ஆய்வு செய்து விட்டு, மிக விரைவான பாதையை தேர்ந்து எடுக்கின்றன.

ஒரு மலரில் அல்லது கனியில் தனக்கு உரிய உணவு உள்ளதா என்பதை மோப்ப சக்தி மூலம் சரியாகக் கண்டுபிடித்தால்தான் வழிகள் எளிதாக இருக்கும். ஒவ்வொரு பூவாகச் சென்று ஏமாந்தால் வழிகள் எளிதாக இருக்காது. அலைச்சல்தான் மிச்சமாகும். தேனீக்களின் மோப்பசக்தி மிகத் துல்லியமாக அமைந்துள்ளதயும் இன்று விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

திருக்குர்ஆன் "தேனீக்கள்" என்ற அத்தியாயத்தில் இவ்வாறு கூறுகின்றது.

- **"மலைகளிலும், மரங்களிலும், மனிதர்கள் கட்டுபவற்றிலும் கூடுகளை நீ அமைத்துக் கொள்! பின்னர் ஒவ்வொரு கனிகளிலிருந்தும்**

**சாப்பிடு! உனது இறைவனின் பாதைகளில் எளிதாகச் செல்!“ என்று உமது இறைவன் தேனீக்களுக்கு அறிவித்தான். அதன் வயிறுகளிலிருந்து மாறுபட்ட நிறங்களையுடைய பானம் வெளிப்படுகிறது. அதில் மனிதர்களுக்கு நோய் நிவாரணம் உள்ளது. சிந்திக்கின்ற சமுதாயத்திற்கு இதில் தக்க சான்று உள்ளது.**

(திருக்குர்ஆன் 16:68-69)

தேனின் மருத்துவ குணங்களைப் பற்றியும், இன்னும் தேனீக்கள் பற்றிய பொதுவான கருத்துக்களைத் தான் அன்றைய மக்கள் (சரியாகவும் தவறாகவும்) கூறி வந்தனர் ஆனாலும் திருக்குர்ஆன் ஆணித்தரமாக அதன் பாதை அமைக்கும் திறனைப் பற்றி குறிப்பிட்டு கூறியது, தன் நம்பகத் தன்மையை முன்னிறுத்தும் செயலே அன்றி வேறில்லை. இதை அந்தத் தேனியைப் படைத்தவன் தவிர வேறு எவராலும் சொல்லியிருக்க முடியாது.

”சிந்திக்கின்ற சமுதாயத்திற்கு இதில் தக்க சான்று உள்ளது” என்று சொல்வதின் மூலம், தேனீயின் இந்த பாதை அறியும் தன்மையை நுண்ணியமாக ஆய்வு செய்வதன் மூலம், மனித குலத்திற்கு நரம்பியல் மற்றும் முளைத் தொடர்பான பல விடயங்களுக்கு தெளிவு கிடைக்கும் என்பதும் உண்மை.

”இன்றைய அறிவியல் உலகில் இது மிகப்பெரிய சவாலை ஏற்படுத்தியது மட்டுமில்லாமல், மனித மூளையில் உள்ள எந்த நரம்பியல் சுற்று மிகக் கடினமான விடயங்களை எளிதில் கண்டுபிடிக்கும் என்பது பற்றிய ஆய்வை தொடரவும் உதவுகின்றது” என்கிறார் பேராசிரியர் லார்ஸ் சிட்கா.

*நன்றி:* scienceprovesquran.blogspot


**திருக்குர்ஆன் தமிழாக்கம் அன்பளிப்புப் பிரதி பெற விரும்பும் மாற்றுமத அன்பர்கள் கீழ்கண்ட எண்களில் தொடர்பு கொள்ளவும்:**

**சென்னை: 9941227866, 9894442844, 8122264467(மயிலாப்பூர்), 9840572018 (நுங்கம்பாக்கம்), 9840527687 (பல்லாவரம்), 9087836393(தாம்பரம்), ஓசூர்:9994713191 கிருஷ்ணகிரி: 9952862321 தர்மபுரி:9842627171 கோவை: 9600800050 திருப்பூர்:9150068919 குன்னூர்:9843622246 ஊட்டி:9543963412 ஈரோடு:7373947869, 9942958888 உடுமலை:9865051917 சேலம்:9994091364 திருச்சி:9865446344, 9442709087 மதுரை:9789341714 கும்பகோணம்:9597285160 விழுப்புரம்:9790290002 திருநெல்வேலி:9786230030 தென்காசி :9443695979 வேலூர்:9944656942 மயிலாடுதுறை:9942941190 திருவண்ணாமலை:9994564650, 9944905212 தூத்துக்குடி:8148059038 இளையான்குடி: 9842081210 ராஜபாளையம்:7845033616 ராமநாதபுரம்:7418140634 பாம்பன்:9043758656 கே.ஜி.எ.ஃ.ப்:9845217262**



Printed, published &edited by A.Mohamed Kasim on behalf of House of Peace, No.501, 3rd cross, Syed Block, AS palya, Bangalore 560017 and printed at Print-O- Graph, Balaji complex, Sultanpet, Bangalore.
Registered News paper in India No. KARTAM/2007/28173

# திருக்குர்ஆன் பற்றிய நபிமொழிகள்

நபிகள் நாயகம் மூலமாக உலக மக்கள் அனைவருக்கும் வேண்டி அருளப்பட்ட வேதமே திருக்குர்ஆன். இதனைப் படித்து அதன்படி வாழ்க்கையை வாழ்வோருக்கு இம்மை வாழ்வும் செம்மையாக அமைகிறது. மறுமையிலும் தெவிட்டாத இன்பங்கள் நிறைந்த சொர்க்கம் வாய்க்கிறது. திருக்குர்ஆனை வாய்க்கப்பெறும் பல நன்மைகளைப் பற்றி நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் கூறியவற்றில் சிலதை இங்கு காண்போம்:

## குர்ஆனை ஏற்போரும் மறுப்போரும்:

● நிச்சயமாக இந்தக் குர்ஆன் பரிந்துரை செய்யக்கூடியதாகும். அது ஏற்கப்படக்கூடியதுமாகும். அதனைப் பின்பற்றினால் அவரை அது சுவனத்தில் சேர்க்கும். அதனை பின்பற்றாமல் விட்டு விட்டால் அல்லது நிராகரித்தால் அவர் நரகின் அடித்தளத்தில் தள்ளப்படுவார்.

(அறிவிப்பாளர்: இப்னு மஸ்வூத்(ரலி) - ஆதாரம் : முஸ்லிம்)

## கற்றலும் கற்பித்தலும்

● குர்ஆனைத் தானும் கற்று பிறருக்கும் கற்றுக் கொடுப்பவரே உங்களில் சிறந்தவர்.

(அறிவிப்பாளர்: உஸ்மான்(ரலி) - ஆதாரம் : புகாரி)

## இறைவனோடு இணைக்கும் பிடிமானம்

● இக்குர்ஆனின் ஒரு முனை இறைவனின் கையிலும் மறுமுனை உங்கள் கைளிலும் உள்ளது. எனவே இதனை உறுதியாகப் பிடித்துக் கொள்ளுங்கள் நீங்கள் இம்மையில் வழிதவறமாட்டீர்கள், மறுமையில் அழிவுறவும் மாட்டீர்கள். (அறிவிப்பாளர்: அபூஹுரைரா(ரலி) - ஆதாரம் : தப்ரானி )

## ‘பித்அத்’ எனும் வழிகேடு

● வார்த்தைகளில் மிகச் சிறந்தது அல்லாஹ்வின் வேதமாகும். வழிகாட்டுதல்களில் மிகச்சிறந்தது முஹம்மது(ஸல்) அவர்களின் பாதையாகும். மார்க்கத்தில் தீமையானது மார்க்கத்தில் புதிதாகப் புகுத்தப்பட்ட நவீன அனுஷ்டானங்கள் ஆகும். (இதற்கு இஸ்லாமிய வழக்கில் ‘பித்அத்’ என்று சொல்லப்படும்.) ஒவ்வொரு பித்அத்தும் வழிகேடாகும். (ஆதாரம் : முஸ்லிம்)

## ஒரு எழுத்துக்குப் பத்து நன்மை

● எவர் குர்ஆனிலிருந்து ஒரு எழுத்தை ஓதினாலும் அதில் நன்மை இருக்கிறது. ஒரு நன்மை அதுபோன்று பத்து மடங்காக்கப்படும். ”அலீஃப், லாம், மீம்” ஒரு எழுத்து என்று சொல்லமாட்டேன். மாறாக அலீஃப் ஒரு எழுத்து, லாம் ஒரு எழுத்து, மீம் ஒரு எழுத்துமாகும் என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(அறிவிப்பாளர் : இப்னு மஸ்வூத்(ரலி) - ஆதாரம் : திர்மிதி, தாரமி.)

## அண்ணலார் கூறிய உவமை

● குர்ஆனை ஓதக்கூடியவருக்கு உவமைகளையும், ஓதாமல் இருப்பவருக்கு உவமைகளையும் பெருமானார்(ஸல்) அவர்கள் மொழிந்துள்ளார்கள். குர்ஆனை ஓதக்கூடிய இறைவிசுவாசியின் உவமை

பழத்தைப் போன்றது. அதனுடைய வாசனையோ மணமானது. அதனுடைய சுவையோ ருசிக்கத்தக்கது. குர்ஆனை ஓதாத இறைவிசுவாசியின் உவமை பேரீத்தம் பழத்தை போன்றது. அதற்கு வாசனை இல்லை. அதனுடைய சுவையோ இனிப்பானது. குர்ஆனை ஓதாத நயவஞ்சகனின் உவமை குமட்டிக்காய் போன்றது. அதற்கு வாசனை இல்லை. அதனுடைய சுவையோ கசப்பானது. குர்ஆனை ஓதக்கூடிய நயவஞ்சகனின் உதாரணம் துளசி செடியை போன்றது. அதனுடைய வாசனை மணமானது. அதனுடைய சுவையோ கசப்பானது என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (அறிவிப்பாளர்: அபு மூஸா(ரலி) - ஆதாரம் : புகாரி, முஸ்லிம்)

### கற்றபின் நிற்க அதற்குத்தக!

● குர்ஆனைக் கற்றுக் கொள்ளுங்கள் மேலும் அதை ஓதுங்கள். குர்ஆனைக் கற்று அதனை ஓதி அதன் அடிப்படையில் நடப்போருக்கு உவமையானது கஸ்தூரியால் நிரப்பப்பட்ட பையைப் போன்றது. அது அனைத்து இடங்களிலும் மணம் வீசிக்கொண்டிருக்கும். குர்ஆனைக் கற்று அது அவருடைய உள்ளத்தில் பசுமையாய் பதிந்தும் அதனடிப்படையில் நடக்கவில்லையோ அவரின் உவமை கஸ்தூரியால் நிரப்பப்பட்ட பையை அது பரவாமல் கட்டிக்கொண்டவரைப் போல என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (அறிவிப்பாளர்: அபுஹுரைரா(ரலி) - ஆதாரம் : திர்மிதி, நஸயீ, இப்னுமாஜா)

### சொர்க்கத்தில் அந்தஸ்து

● மறுமை நாளில் குர்ஆனை ஓதி அதனடிப்படையில் நடந்தவரிடம் “குர்ஆனிய தோழரே ஓதுவீராக” என்று கூறப்படும். மேலும் “உலகத்தில் எவ்வாறு நிறுத்தி நிதானமாக ஓதினீரோ அவ்வாறு ஓதுவீராக! நிச்சயமாக எந்த வசனத்தை கடைசியாக ஓதி முடிப்பாரோ அதுதான் சொர்க்கத்தில் உமது அந்தஸ்தாகும்” என்று கூறப்படும் என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் பின் அம்ர்(ரலி) - ஆதாரம் : அபூதாவுத், திர்மிதி)

### குர்ஆனைக் கற்றோரின் சிறப்பு

● குர்ஆனை ஓதுவதில் தேர்ச்சி பெற்றவர் கண்ணியமிக்க வானவர்களுடன் இருப்பார். குர்ஆனை ஓதுவது சிரமமாக இருப்பினும் அதைத் திருப்பித்திருப்பி சிரமத்துடன் ஓதுவாரானால் அவருக்கு இரண்டு கூலி இருக்கிறது என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (அறிவிப்பாளர்: ஆயிஷா(ரலி) - ஆதாரம் : புகாரி, முஸ்லிம்)

● குர்ஆனை ஓதிய தோழர் மறுமையில் வருவார். அப்போது குர்ஆன் “இறைவா இவருக்கு ஆடையை அணிவி” என்று சொல்லும் அப்போது அவருக்கு உயர்ந்த கிரீடம் அணிவிக்கப்படும். “இறைவா இவருக்கு உன் அருளை வழங்குவாயாக!” என்று கூறும். அப்போது அவருக்கு உயர்ந்த சீருடை அணிவிக்கப்படும். பிறகு குர்ஆன் இவரை பொருந்திக் கொள்ளுமாறு சொல்லும் அவரை இறைவன் பொருந்திக் கொள்வான். அம்மனிதரிடம் குர்ஆனை நிறுத்தி நிதானமாக ஓதுவீராக! என்று

சொல்லப்படும். அவர் ஓதுகிறபோது ஒவ்வொரு வசனத்திற்க்கும் ஒரு நன்மை அதிகப்படுத்தப்படும் என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (அறிவிப்பாளர்: அபுஹுரைரா(ரலி) - ஆதாரம் : திர்மிதி, இப்னு குஸைமா)

### ஒட்டகங்களைப் பரிசாகப் பெற எளிய வழி

● நாங்கள் திண்ணையில் அமர்ந்து இருக்கிற சமயத்தில் பெருமானார்(ஸல்) எங்களிடம் வந்து "உங்களிடம் பாவம் செய்யாது சொந்த பந்தங்களை துண்டிக்காத நிலையில் ஒவ்வொரு நாளும் புத்ஹான் அல்லது ஹதீக் என்ற இடத்திற்கு சென்று திமில்களுடைய இரண்டு ஒட்டகங்களை கொண்டு வர யார் விரும்புவார்?" என வினவினார்கள். "நாங்கள் அனைவரும் இதை விரும்புவோம்" என்று பதிலளித்தோம். உங்களில் ஒருவர் பள்ளிவாசல் பக்கம் செல்லக்கூடாதா? அவ்வாறு சென்று அல்லாஹ்வுடைய வேதத்தில் இரண்டு வசனங்களை ஓதுதல் அல்லது கற்றல் இரண்டு ஒட்டகங்களை விட சிறந்தது. மூன்று வசனங்களை ஓதுவது மூன்று ஒட்டகங்களை விட சிறந்தது. நான்கு வசனங்களை ஓதுவது நான்கு ஒட்டகங்களை விட சிறந்தது" என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

தொடர்ந்து, "உங்களில் ஒருவர் தன்னுடைய இல்லத்திற்கு செல்லும்போது தன்னுடன் நல்ல கொழுத்த மூன்று ஒட்டகங்களை பெற்றுச் செல்லவேண்டும் என்று விரும்புவாரா?" என்று வினவினார்கள். நாங்கள் அனைவரும் அதை விரும்புவோம் என்று கூறினோம். மூன்று (குர்ஆனிய) வசனங்களை உங்களில் ஒருவர் தன்னுடைய தொழுகையில் ஓதுவது அவருக்கு நல்ல கொழுத்த மூன்று ஒட்டகங்கள் கிடைப்பதை விட சிறந்தது என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (அறிவிப்பாளர்: அபுஹுரைரா(ரலி) - ஆதாரம் : முஸ்லிம், இப்னுமாஜா)

ஏக இறைவனின் பெயரால்...

## உலக மக்களின் வாழ்வு வழிகாட்டி புனித குர்ஆன்

**மேதின சிறப்பு சொற்பொழிவு**

நிகழ்ச்சியில் சொற்பொழிவைத் தொடர்ந்து இஸ்லாம் குறித்த கேள்விகளுக்கு பதில் அளிக்கப்படும். அதைத் தொடர்ந்து விருந்து உபசரிப்பு நடைபெறும்.

அனைத்து மத சகோதர, சகோதரிகள் குடும்பத்துடன் வருக ! வருக! இறையருளைப் பெறுக !

நாள் & நேரம்: **01.05.2018** செவ்வாய்கிழமை (இறைவன் நாடினால்) காலை **10.00** மணி முதல் மாலை **5.00** மணி வரை

**இடம் : கோல்டன் மஹால், சிங்காரத்தோப்பு, திருச்சி-8.**

ஏற்பாடு: சமூக சகோதரத்துவ இஸ்லாமிய பேரவை அறக்கட்டளை, திருச்சி. தொடர்புக்கு : **9442709087**

# உங்கள் எதிர்காலம் உங்கள் தேர்வில்

இன்று வாழ்வோர் அனைவருக்கும் தெள்ளத்தெளிவாக விளங்கும் உண்மைகள் சில உள்ளன. அவற்றை யாரும் மறுக்கவோ மாற்றவோ முடியாது...

- நாமாக நாம் இங்கு வரவில்லை.
- நமது உடல் பொருள் ஆவி இவற்றின் உரிமையாளர் நாமல்ல.
- இம்மாபெரும் பிரபஞ்சத்தில் மிகவும் அற்பமான பூமி என்ற ஒரு துகளின் மேல் ஒட்டிக்கொண்டிருக்கும் மற்றொரு நுண்துகள் போன்றவர்கள் நாம்.
- நம்மை மீறிய ஒரு அதிபக்குவமான நுண்ணறிவும் அளவிலா வல்லமையும் கொண்ட சக்திதான் இந்த மாபெரும் பிரபஞ்சத்தையும் நம்மையும் நமது உடலின் உட்கூறுகளையும் அதிபக்குவமான முறையில் உருவாக்கி இடையறாது இயக்கி பரிபாலித்து வருகிறது.
- ஆறடி உயரம் நிற்கும் அற்ப மனிதராகிய நமது ஆயுளும் நீர்க்குமிழி போல மின்னி மறைவதே.

### உண்மையா பொய்யா ஆய்வு செய்க!

நம்மைப்பற்றிய உண்மைகள் இவ்வாறிருக்கும்போது நம்மை மீறிய அந்த மறைவான சக்தி நம்மோடு உரையாட முற்பட்டால் அதைச் செவிகொடுத்துக் கேட்டு சொல்லப்படுபவை உண்மையா பொய்யா என்று ஆய்வு செய்வதே உண்மையான பகுத்தறிவு. மாறாக அவற்றுக்கு செவிசாய்க்காமல் மனோஇச்சைக்கு வழங்கி கண்மூடித்தனமாக மறுப்பது என்பது அறிவீனமான ஒரு நடவடிக்கை என்றுதானே சொல்லமுடியும்?

- **அவர்கள் இந்தக் குர்ஆனை ஆராய்ந்து பார்க்க வேண்டாமா? அல்லது, இவர்களுடைய உள்ளங்கள் மீது தாளிடப் பட்டு விட்டதா? (திருக்குர்ஆன் 47:24)**
- **(நபியே!) இவ்வேதத்தை நாமே உங்கள்மீது இறக்கி வைத்தோம். இது மிக பாக்கியமுள்ளது. அறிவுடையவர்கள் இதன் வசனங்களை கவனித்து ஆராய்ந்து நல்லுணர்ச்சி பெறுவார்களாக! (திருக்குர்ஆன் 38:29)**

இவ்வுலகைப் படைத்து பரிபாலித்து வரும் இறைவன் தனது இறுதிவேதமான திருக்குர்ஆன் மூலம் இன்று இவ்வுலகில் வாழும் மக்களோடு பேசுகிறான். இதை பகுத்தறிவோடு ஆராய்ந்து அதன் வழிகாட்டுதல்களை ஏற்று வாழ்வோர் இந்த வாழ்க்கையின் நோக்கம் பற்றிய தெளிவு பெறுகிறார்கள். ஆக்கபூர்வமான முறையில் இவ்வுலக வாழ்வை வாழ்கிறார்கள். மறுமையில் நிரந்தர இன்பங்கள் நிறைந்த சொர்க்கம் என்ற வாழ்விடத்தைப் பரிசாகப் பெறுகிறார்கள். மாறாக இவ்வேதத்தைக் கண்மூடித்தனமாக மறுப்போர் வாழ்க்கையின் நோக்கம் பற்றிய தெளிவின்மையால் குழப்பம் நிறைந்த வாழ்வு வாழ்கிறார்கள். படைத்தவனின் கட்டளைகளை மீறிய குற்றத்திற்காக மறுமையில் வேதனைகள் நிறைந்த நரகம் என்ற வாழ்விடத்தை தண்டனையாகப்

பெறுகிறார்கள்.

## முன்னோர்களின் வழக்கங்கள்

முன்னோர்களின் வழக்கங்களின் மீதுள்ள கண்மூடித்தனமான நம்பிக்கைகள், நாட்டுவழக்கம், தாங்களாக ஏற்படுத்திக்கொண்ட கடவுளர்கள் மீதுள்ள பக்தி, இயக்க சார்பு, அகங்காரம் போன்ற பல காரணங்களின் பொருட்டாலும் தங்கள் இதயத்திற்குத் தாழிட்டு இவ்வேதத்தைப் புறக்கணிப்போரைப் பற்றியும் அவர்களால் வழிகெடுக்கப்பட்ட மக்களைப்பற்றியும் திருக்குர்ஆனில் இறைவன் இவ்வாறு கூறுகிறான்:

● **16:24. "உங்கள் இறைவன் எதை இறக்கியருளியுள்ளான்?" என்று எவரேனும் அவர்களிடம் கேட்டால், "இவையெல்லாம் முற்காலத்தவர்களின் கட்டுக்கதைகள்" என்றே அவர்கள் கூறுகின்றார்கள்.**

● **16:25. இவ்வாறு அவர்கள் கூறுவதன் விளைவாக, மறுமைநாளில் தங்களுடைய பாவங்களை முழுமையாகச் சுமப்பதுடன், அறியாமையினால் யார் யாரை இவர்கள் வழிகெடுத்துக் கொண்டிருக் கிறார்களோ அவர்களுடைய பாவங்களையும் சுமப்பார்கள். பாருங்கள்! எப்படிப்பட்ட மோசமான சுமையை இவர்கள் சுமந்து கொண்டிருக்கின்றார்கள்!**

## தொடர்கதை

இன்று எவ்வாறு இறுதிவேதம் உள்ளதோ அதைப்போலவே இறைவன் இதற்கு முன்னரும் பல்வேறு காலகட்டங்களில் தன் தூதுச் செய்தியை பல்வேறு இறைத்தூதர்கள் மூலம் அனுப்பி வந்துள்ளான். அவற்றையும் மறுப்பவர்கள் இருந்தே வந்துள்ளார்கள். படைத்தவனை மட்டுமே வணங்கி வாழவேண்டும் படைப்பினங்களையும் மனிதர்களையும் வணங்குவது பாவம் என்ற இறைச் செய்தியைப் புறக்கணித்து தாங்களாக உருவாக்கியவற்றை கடவுளர்களாக பாவித்து வணங்கினார்கள். படைத்த இறைவனுக்கு முன்னால் மறுமையில் விசாரணை உண்டு, சொர்க்கமும் நரகமும் உண்டு என்று தூதர்கள் எடுத்துரைத்தபோது அவர்களை ஏளனம் செய்தார்கள். அந்தப் புனிதர்களையும் சத்தியத்தைப் பின்பற்றியோரையும் வேதனைகளும் சித்திரவதைகளும் செய்தார்கள். பூமியில் அட்டூழியங்கள் செய்தார்கள். குழப்பங்கள் விளைவித்தார்கள். அதர்மத்தை வளர்த்தார்கள். அவர்களின் கொடுங்கோன்மை முற்றிய நிலையை அடையும்போது இறைவன் அவர்களை அழிக்கவும் செய்துள்ளான். ஆனால் அவர்கள் செய்த பாவங்களுக்கான உண்மையான தண்டனை மறுமையில் காத்திருக்கிறது. அவர்களைப்பற்றியும் அவர்களின் மறுமை நிலை பற்றியும் இறைவன் பின்வருமாறு கூறுகிறான்:

● **16:26. இவர்களுக்கு முன்னர் வாழ்ந்த மக்களில் பலரும் (சத்தியத்தை வீழ்த்துவதற்காக இவ்வாறே) சூழ்ச்சிகளைச் செய்திருக்கின்றார்கள். ஆனால், இறைவன் அவர்களின் (சூழ்ச்சிக்) கட்டிடத்தை அடியோடு பெயர்த்துவிட்டான்! மேலிருந்து அதனுடைய முகடு, அவர்களின் தலைமீது விழுந்தது. மேலும், அவர்கள் சற்றும் எண்ணிப்பாராத திசையிலிருந்து வேதனை அவர்களை வந்தடைந்தது. பிறகு மறுமைநாளில் அல்லாஹ் அவர்களை இழிவுபடுத்துவான்!**

● 16:27. மேலும், அவர்களிடம் கேட்பான்: “இப்பொழுது எனக்கு இணையாக்கப்பட்டவர்கள் எங்கே? அவர்களுக்காகத்தானே நீங்கள் சத்திய சீலர்களுடன் மோதிக் கொண்டிருந்தீர்கள்?” அறிவு வழங்கப்பட்டிருந்தவர்கள் கூறுவார்கள்: “இன்று இழிவும், துர்பாக்கியமும் சத்திய மறுப்பாளர்களுக்கே!”

### உயிர் கைப்பற்றும்போது சரணடைதல்

● 16:28. அவர்கள் எத்தகையவர்களென்றால், தமக்குத்தாமே அநீதி இழைத்துக் கொண்டிருக்கும் நிலையில் அவர்களின் உயிர்களை வானவர்கள் கைப்பற்றும்போது (வரம்பு மீறும் போக்கை விட்டுவிட்டு) சரணடைந்து “நாங்கள் எந்தக் குற்றமும் செய்து கொண்டிருக்கவில்லையே?” என்று கூறுவார்கள். அதற்கு (வானவர்கள்) பதில் கூறுவார்கள்: “செய்து கொண்டிருக்கவில்லையா...? அல்லாஹ் உங்களுடைய இழிசெயல்களை நன்கறிந்திருக்கின்றான்.

### மோசமான தங்குமிடம்

● 16:29. இப்பொழுது நரக வாயில்களிலே நுழையுங்கள்! அங்கே நீங்கள் என்றென்றும் வீழ்ந்துகிடக்க வேண்டும்.” உண்மையில் ஆணவம் கொண்டவர்களின் தங்குமிடம் மிகவும் மோசமானதாகும்.

### சத்திய சீலர்களின் உன்னத நிலை

*வேதத்தை கண்மூடித்தனமாக மறுத்தோரின் மேற்கூறப்பட்ட நிலைக்கு நேர் எதிரானது வேதத்தை ஏற்று அதன்படி வாழ்ந்தோரின் நிலை.*

● 16:30. (மற்றொரு புறம்) இறையச்சமுடையோரை நோக்கி வினவப்படும்: “உங்கள் இறைவன் இறக்கியருளியது என்ன?” அதற்கு அவர்கள், “மிகச் சிறந்ததை (இறக்கியருளினான்)” என்று மறுமொழி கூறுவார்கள். இவ்வாறு நற்செயல் புரிந்தவர்களுக்கு இவ்வுலகிலும் நன்மை இருக்கிறது. மறு உலகமோ திண்ணமாக அவர்களுக்கு மிகச் சிறப்புடையதாகவே இருக்கும். மேலும், இறையச்சமுடையவர்களின் இல்லம் மிகவும் சிறப்புடையதாகும்.

● 16:31. அது நிலைத்திருக்கும் சுவனங்களாகும். அவற்றில் அவர்கள் நுழைவார்கள் அவற்றின் கீழ் ஆறுகள் ஓடிக்கொண்டிருக்கும். அங்கு அவர்களின் விருப்பத்திற்கேற்ப அனைத்தும் கிடைக்கும். இறையச்சமுடையவர்களுக்கு இறைவன் இவ்வாறே கூலி வழங்குகின்றான்.

### உயிர் கைப்பற்றப் படும்போது சாந்தி!

● 16:32. அவர்கள் எத்தகையவர்களென்றால், தூய்மையான நிலையில், அவர்களின் உயிர்களை வானவர்கள் கைப்பற்றுவார்கள். அப்போது வானவர்கள் கூறுவார்கள்: “உங்கள் மீது சாந்தி நிலவட்டும் நீங்கள் செய்து கொண்டிருந்த நற்செயல்களின் பலனாக சுவனத்தில் நுழையுங்கள்!”


## தமிழகம் முழுக்க ஏஜெண்டுகள் தேவை

எமது திருக்குர்ஆன் நற்செய்தி மலர் - சமூக விழிப்புணர்வு மாத இதழை தமிழகத்தின் அனைத்து ஊர்களிலும் விநியோகம் செய்ய முன்பணம் செலுத்தக்கூடிய ஏஜெண்டுகள் தேவை. ஏஜெண்டு கமிஷன் 40%. தொடர்புக்கு : 09886001357

# அநீதிகள் அடங்குவது எப்போது?



● ஜம்மு-காஷ்மீர் மாநிலம் கத்துவாவில் 8 வயது சிறுமி ஆசி∴பா பாலியல் பலாத்காரம் செய்து கொலை செய்யப்பட்ட சம்பவம் நாடு முழுவதும் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது. இந்த சம்பவம் தொடர்பாக 3 போலீசார், ஒரு சிறுவன் உள்பட மொத்தம் 8 பேர் மீது குற்றப்பத்திரிகை சமர்பிக்கப்பட்டுள்ளது.

● சமீபத்தில் நடந்த சிரியா போரில் பச்சிளம் பாலகர்கள் மீது இரசாயன ஆயுதங்கள் பிரயோகம். கொத்துக்கொத்தாக அப்பாவி உயிர்கள் பலி!

● அரசுக் கட்டிலை அநீதியான முறையில் கைப்பற்றி கார்பரேட் சக்திகளின் கைக்கூலிகள் நாட்டில் பரவலாக நடத்திவரும் கொள்ளைகள்!

- பட்டியல் இன்னும் நீளமானது என்றறிவோம்.

ஆம், அன்றாட நாட்டு நடப்புகளையும் உலக நடப்புகளையும் கண்டு மனம் வெதும்பாதவர் யாரையும் இன்று காண்பது அரிது! அநியாயம் செய்தவர்களும் அக்கிரமங்கள் செய்பவர்களும் சுதந்திரமாகத் திரிவதும் நாட்டில் உயர் பதவிகளில் இருந்து ஆதிக்கம் செய்வதும் அதிகரித்து வருகின்றன. அவர்கள் தங்கள் தொண்டர்களால் மரியாதை செய்யப்படுவது மட்டுமல்ல, இஷ்ட தெய்வங்களாக பூஜை செய்யவும் படுகின்றனர். கொலை கொள்ளை விபச்சாரம் போன்றவற்றில் ஈடுபட்டு அப்பட்டமாக கையும் களவுமாக பிடிபடுபவர்கள் அடுத்த நாளே சிரித்த முகத்தோடு உலா வருவதும் பொதுமக்களை முட்டாள்களாக ஆக்குவதும் தொடர்கின்றன. இவை போன்ற பல உதாரணங்களை அடுக்கிக்கொண்டே போகலாம்.

## இறைவன் எங்கே போனான்?

இவற்றை எல்லாம் காணும் பலரும் ‘இறைவனே இல்லை’ என்றும் இறைவன் இருந்திருந்தால் இந்த அநியாயங்கள் நடக்குமா?’ என்றெல்லாம் புலம்புவதை நாம் அன்றாடம் காண்கிறோம். இதன் காரணமாக சில ஆத்திகர்களும் நாத்திகத்துக்குத் தாவி விடுகின்றனர். இவர்கள் தங்கள் கண்முன் நடப்பவற்றை மட்டும் காண்கிறார்கள். குறுகிய கண்ணோட்டத்தால் உண்மைகளை சிந்திக்க மறுக்கிறார்கள் என்பதே உண்மை. இந்த புலம்பல்கள் அறியாமையின் வெளிப்பாடுகளே என்பதை சிந்திப்போர் அறியலாம்.

இந்தப் பரந்துவிரிந்த பிரபஞ்சத்தில் மனிதன் என்ற சிறு ஜீவி தன்னை அனைத்தும் அறிந்தவனாக பாவித்துக் கொள்வதால்தான் இந்த குறுகிய மனப்பான்மை உண்டாகிறது. தனக்குத் தெரியாதவற்றையும் தன் புலன்களுக்கும் அறிவுக்கும் எட்டாதவற்றையும் ஒரேயடியாக இல்லை என்று முடிவு செய்வதும் அதுதான் இன்று பகுத்தறிவுவாதம் என்று சிலரால் தம்பட்டம் அடிக்கப் படுகிறது. மாறாக தன புலன்களுக்கும் அறிவுக்கும் எட்டாதவற்றைப் பற்றி யாராவது கூறும்போது அதன் சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து அறிவதே உண்மையில் பகுத்தறிவு

என்பது.

அந்த அடிப்படையில் இவ்வுலக அமைப்பையும் இங்கு காலாகாலமாக நடைபெறுபவற்றையும் ஆராயும்போது இவ்வாழ்க்கை என்பது ஒரு பரீட்சை என்பதையும் இவ்வுலகம் என்பது ஒரு பரீட்சைக்கூடம் என்பதையும் நாம் அறிய முடியும். இறைவேதங்களும் இறைத்தூதர்களும் கூறுவது போல இவ்வுலகம் அழிக்கப்பட்ட பின்னர்தான் அனைத்து மனிதர்களும் மீண்டும் உயிர்பிக்கப் பட்டு முழுமையான நியாயத்தீர்ப்பு உண்டாகும் என்பது உண்மை என்பதையும் உணர முடியும்.

## உடனுக்குடன் தண்டித்தால் என்ன ஆகும்?

ஒரு பரீட்சைக் கூடத்தில் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது ஏதேனும் மாணவன் தவறாக விடைஎழுதிக் கொண்டிருப்பதைக் கண்ட ஒரு மேற்பார்வையாளர் உடனே குறுக்கிட்டு அந்த மாணவனைத் திருத்தினாலோ அல்லது அவனை உடனேயே தண்டித்தாலோ அங்கு பரீட்சையின் நோக்கம் நிறைவேறுமா? அதைப்போன்றதுதான் இறைவன் நடத்திவரும் பரீட்சையும்! இறைவன் இவ்வுலகு என்ற பரீட்சைக் கூடத்திற்கு ஒரு தவணையை நிச்சயித்துள்ளான். அக்கூடத்திற்குள் வந்து செல்லும் ஒவ்வொருவருக்கும் வேறுவேறு தவணைகளை நிச்சயித்துள்ளான். அனைவருக்கும் அதை முழுமிக்க வாய்ப்பளிக்கிறான். ஒருசிலர் அவசரப் படுவதுபோல இறைவன் விரைந்து ஏன் தண்டிப்பதில்லை? இறைவனே தன் திருமறையில் கூறுகிறான்.

● **மனிதர்களுடைய அநீதியின் காரண மாக அவர்களை அல்லாஹ் தண்டிப்பதாகஇருந்தால் பூமியில் எந்த உயிரினத்தையும் அவன் விட்டு வைக்க மாட்டான்.மாறாக குறிப்பிட்ட காலக்கெடு வரை அவர்களைப் பிற்படுத்தியிருக்கிறான்.அவர்களின் கெடு வந்ததும் சிறிது நேரம் பிந்தவும் மாட்டார்கள். முந்தவும்மாட்டார்கள். (திருக்குர்ஆன் 16:61)**

● **உமது இறைவன் மன்னிப்பவன் இரக்கமுள்ளவன். அவர்கள் செய்ததற்காக அவர்களைப் பிடிப்பதாக இருந்தால் அவர்களது வேதனையை விரைந்து வழங்கியிருப்பான். மாறாக அவர்களுக்கென ஒரு நேரம் உள்ளது. அதை விட்டும் தப்புமிடத்தைப் பெற மாட்டார்கள். . (திருக்குர்ஆன் 18:58.)**

## என்று தணியும் நீதியின் வேட்கை?

இப்பரீட்சைக்கூடம் ஒருநாள் மூடப்படும். அதற்குப் பிறகு மீண்டும் இறைவனிடம் இருந்து கட்டளை வரும்போது இப்பரீட்சையின் முடிவுகள் வெளியாகும். அன்று முதல்மனிதன் முதல் இறுதிமனிதன் வரை அனைவரும் மீண்டும் உயிர்கொடுத்து எழுப்பப் படுவார்கள். அன்றுதான் இறுதித் தீர்ப்புநாள் ஏற்படுத்தப் படுகிறது. யார் பரீட்சையில் வெற்றி பெறுகிறார்களோ அவர்களுக்கு சொர்க்கமும் தோல்வியுறுவோருக்கு நரகமும் விதிக்கப்படும்.

● **ஒவ்வொருவரும் மரணத்தைச் சுவைப்பவரே. கியாமத் நாளில் தான் உங்களின் கூலிகள் முழுமையாக வழங்கப்படும். நரகத்தை விட்டும் தூரமாக்கப்பட்டு சொர்க்கத்திற்கு அனுப்பப்பட்டவர் வெற்றி பெற்று விட்டார். இவ்வுலக வாழ்க்கை ஏமாற்றும் வசதிகள் தவிர வேறில்லை. (திருக்குர்ஆன் 3:185)**

## முழுமை பெறும் நீதியின் வேட்கை!

ஆம், அன்றுதான் நீதியின் வேட்கை முழுமை பெறும். அன்று இவ்வுலகில் செய்யப்பட்ட அனைத்து அநீதிகளும் மோசடிகளும் மனித உரிமை மீறல்களும் ஒன்றுவிடாமல் வெளிப்படும். அவை யாருமே பார்க்க முடியாது என்று நினைத்து இரகசியமாக செய்யப்பட்டவையானாலும் சரியே. தட்டிக் கேட்பதற்கு யாருமே இல்லை என்ற மமதையில் அதிகாரம் கொண்டவர்கள் பலவீனமானவர்கள் மீது தொடுத்த அத்துமீறல்கள் ஆனாலும் சரியே. அனைத்தும் வெளிச்சத்திற்கு வந்துவிடும். அனைவருக்கும் அவரவர் உரிமைகள் முழுமையாக மீட்டப்படும். எந்த அளவுக்கு என்றால் ஒவ்வொரு சின்னஞ்சிறு உரிமைமீறல்களும் கணக்கு தீர்க்கப்பட்டுவிடும்.

● நியாயத் தீர்ப்பு நாளில் (பறித்த) உரிமைகளை உரியவர்களிடம் நீங்கள் வழங்கியாக வேண்டும். கொம்பு இல்லாத ஆட்டுக்காக கொம்புள்ள ஆட்டிடம் கணக்குத் தீர்க்கப்படும் என்பது நபிமொழி.(நூல்: முஸ்லிம் 4679)

அதாவது ஒரு ஆடு இன்னொரு ஆட்டை முட்டித் தாக்கியிருந்தால் முட்டப்பட்ட ஆடு முட்டிய ஆட்டைத் தாக்கும் வாய்ப்பை அன்று இறைவன் வழங்குவான். இவ்வுலகைப் பொறுத்தவரையில் இதுதான் இறைவனின் ஏற்பாடு. இதைத் தட்டிக்கேட்க நமக்கு எந்த உரிமையும் கிடையாது. நாம் மிகமிக அற்பமானவர்கள். நம் சிற்றறிவைக் கொண்டு இப்பரந்த பிரபஞ்சத்தின் படைப்பாளனின் திட்டங்களை ஆராயவும் எடைபோடவும் முடியாது என்பதை ஒப்புக்கொண்டு அவன் தனது தூதர்கள் மூலமாக எதை அறிவித்துத் தருகிறானோ அவற்றை அப்படியே ஏற்பதுதான் அறிவுடைமை!

# நபிகளார் பரிந்துரைத்த பார்லி

● அன்னை ஆயிஷாரழி அவர்கள் நோயாளிகளுக்கு 'தல்பினா' கஞ்சி தயாரித்துக் கொடுக்கச் சொல்வார்கள். மேலும் "தல்பீனா நோயாளியின் மனதை அமைதிப் படுத்துகிறது. கவலையை மறக்கடிக்கிறது" என்பதாக நபி(ஸல்) அவர்கள் கூறியதாகக் கூறினார்கள். (நூல்: புஹாரீ)

விளக்கம்: பார்லி அரிசியை இடித்து பால் ஊற்றிக் காய்ச்சி, சுவைக்காக அதில் சிறிது பேரீச்சம்பழம் மற்றும் தேன் சேர்க்க வேண்டும். இதுவே தல்பீனாக் கஞ்சி எனப்படும்.

● உம்முல் முந்திர் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள் "இறைத்தூதர் (ஸல்) அவர்கள் எனது கூடாரத்தினுள் வந்தார்கள். அப்போதுதான் நோயிலிருந்து நலமாகியிருந்த அலீ (ரலி) அவர்களும் கூட வந்தார்கள். எங்கள் இல்லத்துக்கு முன் பேரித்த மரம் இருந்தது. அதன் குலைகளிலிருந்து நபி (ஸல்) அவர்கள் பழங்களைப்பறித்து உண்டார்கள். அலீ (ரலி) அவர்களும் அவ்வாறே பழங்களைப் பறித்துண்ட போது, நபியவர்கள், அவர்களை நோக்கி, "மெதுவாக! மெதுவாக! நீங்கள் இப்போதுதான் நோய் நீங்கி நலமடைந்துள்ளீர்கள்" எனக் கூறினார்கள். அலீ(ரலி) அவர்கள் மேற்கொண்டு அப்பழங்களை உண்பதை நிறுத்திக்கொண்டார்கள். நான் அவர்களுக்காக ஒரு கிழங்கை பார்லியுடன் காய்ச்சிக் கொடுத்தேன். நபி (ஸல்) அவர்கள் அலீ அவர்களை நோக்கி, "இதை உண்ணுங்கள். இதுதான் உங்களுக்குப் பொருத்தமான உணவு" என கூறினார்கள்.

(நூல்: இப்னு மாஜா)

# உயிர்த்தியாகி மாஷித்தாவின் கைக்குழந்தை

மிஹ்ராஜ் பயணத்தின் போது ஒரு இடத்தில், கஸ்தூரியை விட மிக்க வாசனையைக் கொண்ட அதிசயமான மணமொன்றினை நுகர்ந்த. நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள். ஜிப்ரயீல் (அலை) அவர்களிடம் அதைப் பற்றி கேட்டார்கள். அதற்கு ஜிப்ரயீல் (அலை) அவர்கள் "இந்த வாசனை மாஷித்தாவும் அவருடைய குடும்பத்தினர்களும் இருக்கக் கூடிய (கப்ர் அல்லது சுவர்க்க மாளிகை) இடத்திலிருந்து வருகின்ற வாசனை" என்று கூறினார்கள்.

தொடர்ந்து நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மாஷித்தாவின் வரலாறை விவரிக்கும் படி கேட்க, ஜிப்ரயீல் (அலை) அவர்கள் பின்வருமாறு கூறினார்கள்.

"மாஷித்தா பிர்அவ்னின் குடும்பத்துப் பெண்களுக்கு தலை வாரி விட்ட பெண். ஒரு நாள் அவர் பிர்அவ்னின் மகளுக்கு தலை வாரிக் கொண்டிருந்த போது தற்செயலாக சீப்பு கீழே விழுகிறது. உடனே மாஷித்தா "பிஸ்மில்லாஹ்-அல்லாஹ்வின் திருநாமம் கொண்டு" என்று கூறினார். அப்போது அந்தப் பிள்ளை "நீ அல்லாஹ் என்று கூறியது என் தந்தை பிர்அவ்னைத் தானே?" என்று வினவினாள். அதற்கு மாஷித்தா "இல்லை! என்னையும், உன் தந்தையையும் படைத்து பரிபாலிக்கும் இறைவன் அல்லாஹ்வை" என்று கூறினார்.

(அல்லாஹ் என்றால் வணக்கத்திற்குத்தகுதிவாய்ந்த ஒரே இறைவன் என்பது பொருள்)

மாஷித்தா, வணக்கத்திற்குரிய நாயனாக அல்லாஹ்வையும், இறைத்தூதராக நபி மூஸா (அலை) அவர்களையும் ஈமான் கொண்டு அதை மனதில் மறைத்து வைத்திருந்த பெண்ணாவார்.

உடனே அந்தப் பிள்ளை போய் தன் தந்தை பிர்அவ்னிடம் குற்றஞ் சொல்ல அவன் மாஷித்தாவை சபைக்கு அழைத்து முழு விஷயத்தையும் வினவினான். பிர்அவ்ன் கேட்டான் "என்னைத் தவிர உனக்கு வேறு யாரும் கடவுள் உண்டோ?" என்று. அதற்கு மாஷித்தா "ஆம்! நிச்சயமாக என்னையும் உன்னையும் படைத்து பரிபாலிக்கும் அந்த அல்லாஹ்தான் என் இறைவன்" என்றார் உறுதியோடு.

கோபங்கொண்ட பிர்அவன் நெருப்பை மூட்டி செம்பால் ஆன பெரும் பாத்திரத்தில் எண்ணையைக் கொதிக்க வைத்து மாஷித்தாவுடைய கணவனிலிருந்து ஆரம்பித்து ஒவ்வொரு பிள்ளைகளாக நெருப்பில் எரிந்து கொண்டிருந்த எண்ணெய் பாத்திரத்தில் எறிந்தான். ஆனால் மாஷித்தா மனந்தளறவுமில்லை, அவருடைய ஈமானில் சற்றேனும் உறுதி குறையவுமில்லை.

கடைசியாக பிர்அவன் மாஷித்தாவையும் அவருடைய மார்பில் பால் குடித்ததுக் கொண்டிருந்த கைக் குழந்தையையும் தூக்கி எறியும்படி கூறினான். அப்போது மாஷித்தா "எனது கடைசி ஆசை ஒன்று இருக்கிறது" என்று கூறினார். பிர்அவ்ன் "என்ன, சொல்?" என்று கேட்டான். மாஷித்தா "என்னையும் என் கைக்குழந்தையையும் எண்ணையில் தூக்கி எறிந்த பின் கடைசியாக எமது எலும்புகள் எதுவெல்லாம் மிச்சமாகுமோ அவற்றையெல்லாம் ஒன்றாக ஒரு புடவையினுள் சுற்றி ஒரே கப்றில் அடக்கஞ் செய்ய வேண்டும்" என்று.

கொடிய பிர்அவ்ன் மாஷித்தாவுடைய வேண்டுகோளிற்கு இணக்கம் தெரிவித்தான். அப்போது மாஷித்தா தன் மார்பில் பால் குடித்ததுக் கொண்டிருந்த கைக் குழந்தையைப் பார்த்து "ஒரு பாவமும் அறியாத இந்தப் பிஞ்சும் சேர்ந்து எண்ணையில் கருகப் போகிறதே" என்று தயங்கினார். அப்போது வல்ல அல்லாஹ் அந்தக் குழந்தைக்கு பேசும் சக்தியைக் கொடுத்தான். அக்குழந்தை "கவலைப்படாதே தாயே! நீ சத்தியத்தில் இருக்கிறாய், பொறுமை கொண்டு முன்னேறிச் செல், மறுமையுடைய வேதனைகளும் தண்டனைகளும் இதை விடக் கொடியது" என்று ஆறுதல் கூறியது. கடைசியில் மாஷித்தாவும் அவரது கைக் குழந்தையுடன் எண்ணைப் பாத்திரத்தில் எறியப்பட்டார்கள்.

வல்ல இறைவன் மாஷித்தாயும் அவருடைய குடும்பத்தையும் பொருந்திக் கொண்டு வாக்களித்த உயர்ந்த சுவர்க்கத்தை அளித்து விட்டான்.

அறிவிப்பவர்:- இப்னு அப்பாஸ் (ரலி) நூல்கள்: முஸ்னத் அஹ்மத், தபறானி,

# வாசகர் எண்ணம்

● ஏப்ரல் இதழ் பற்றி.. அறிவியல் புரட்சிக்குக் காரணமாக அமைத்த திருக்குர்ஆன், அறிவியல் வளர்ச்சியில் அரபு முஸ்லிம்களின் பங்களிப்பு, இஸ்லாமியரின் அறிவியல் வீழ்ச்சிக்குக் காரணங்கள் பற்றிய கட்டுரைகள் மிக அருமை. இஸ்லாமியர் தங்களுக்குள் முரண்பட்டு நிற்பதால் தங்கள் பொக்கி'ங்களை இழந்து நிற்கின்றனர் என்பது வருத்தத்திற்குரியது. தங்கள் பணிகள் மேலும் சிறப்படைய பிரார்த்தனை செய்கிறேன்.

**-Dr. முஹம்மது அலி IPS, சென்னை**

● ஏப்ரல் 18 இதழ் பற்றி.. அறிவுலகின் ஆன்மீகப் பார்வையில் அறிவியலை தெளிவாக உலகிற்கு அளித்த இஸ்லாத்தின் புனித பங்களிப்பை இவ்வளவு தெளிவாக அறியத் தந்தமைக்கு நன்றி. தேடல் மிகுந்த எனக்குள் தேங்கிக் கிடந்த நீண்ட நாள் ஐயங்கள் நீங்கிய நிம்மதி இப்போதுதான் ஏற்பட்டுள்ளது. பலருக்கும் இந்த இதழ் தனி நூலாக சென்று சேரப்போவது உறுதி என்பதை அறிவேன். " முழுக்க முழுக்க பின்பற்றுதல் மூலமே ஒருவர் முஸ்லிமாக முடியும்" என்ற வார்த்தை சரியான சுட்டிக்காட்டல். உனர்ந்ததை பின்பற்றுவன் தானே பிறருக்கும் முன்மாதிரியாக விளங்க முடியும்! இந்த இதழ் அறிவுக் களஞ்சியம்.

**- தஞ்சை என்.ஜே. கந்தமாறன், சென்னை**

● நான் ஒரு இந்து. தங்கள் திருக்குர்ஆன் நற்செய்தி மலர் மாத இதழை ஒரு கடையில் படிக்க நேர்ந்தது. அதில் மிக அற்புதமான கருத்துக்களை அடங்கிய செய்திகளை படித்தேன். உலக வாழ்வுக்கும் மறுமை வாழ்வுக்குமான பல கருத்துக்களும் செய்திகளும் படிக்க படிக்க ஆவலை தூண்டுகிறது. எனவே இதழை தொடர்ந்து படிக்க விரும்புகிறேன். தயவுசெய்து என் முகவரிக்கு தொடர்ந்து இதழ்களை அனுப்புமாறு அன்புடன் வேண்டுகிறேன். பழைய இதழ்களையும் சேர்த்து அனுப்புமாறு வேண்டுகிறேன். படிக்க ஆவலாய் இருக்கிறது.

- **எஸ். கெர்சன் சத்தியா , சென்னை**




மேகங்கள் நம் தலைக்கு மேலே வானில் மிதப்பதால் அவை இலேசானவை என்ற பரவலாக மக்கள் நம்பிக் கொண்டிருகிறார்கள். ஆனால் இக்கருத்தை நவீன விஞ்ஞானம் மறுக்கிறது. சராசரி மேகத்திரள் சுமார் 80 யானைகளின் எடையைவிட பழுவானவை என்று கண்டறியப்பட்டுள்ளது. பதினான்கு நூற்றாண்டுகளுக்கு முன்னர் அருளப்பட்ட திருக்குர்ஆனில் மேகங்கள் கனமானவை என்ற கருத்து கூறப்பட்டிருப்பதை நீங்கள் காணலாம்.

● அவன்தான் தன்னுடைய அருள் (மாரிக்)கு முன், நற்செய்தியாக (குளிர்ந்த) காற்றுகளை அனுப்பிவைக்கிறான் அவை **கனத்த மேகங்களைச்** சுமக்கலானதும் நாம் அவற்றை இறந்து கிடக்கும் (வரண்ட) பூமியின் பக்கம் ஓட்டிச் சென்று, அதிலிருந்து மழையைப் பொழியச் செய்கின்றோம் பின்னர் அதைக் கொண்டு எல்லாவிதமான கனிவகை (விளைச்சல்)களையும் வெளிப்படுத்துகின்றோம் - இவ்வாறே நாம் இறந்தவர்களையும் எழுப்புவோம். (எனவே இவற்றை யெல்லாம் சிந்தித்து) நீங்கள் நல்லுணர்வு பெறுவீர்களாக. (திருக்குர்ஆன் 7:57)

● அவன் எத்தகையவெனின், அச்சத்தையும் (அதே நேரத்தில் மழைக்குரிய) ஆதரவையும் தரக்கூடிய நிலையில் மின்னலை அவன்தான் உங்களுக்குக் காட்டுகிறான் **கனத்த மேகத்தையும்** அவனே உண்டாக்குகிறான். (திருக்குர்ஆன் 13:12)

இதிலிருந்து மேகங்களைப் படைத்தவனின் கூற்றே திருக்குர்ஆன் என்பதை நாம் அறியவருகிறோம்

From
**House of Peace**
PO Box No. 1726
Bangalore 560 017

**Registered news paper in India No. KARTAM/2007/28173**
**Registered under Postal Regn. No. KRNA/BGE/1057/2018-2020**
**Posted at BANGALORE PSO, Mysore Road , Bangalore 560026 on 25th or 26th or 27th of every month. No. of Pages: 24+4**
**Licenced to post without prepayment . License No. WPP-308**
Date of Publication: 25th of every month

To

**(PRINTED MATTER)**

.............................................................................

.............................................................................

.............................................................................

.............................................................................



# பெண்குழந்தை காப்போம்

● இவர்களில் ஒருவருக்கு பெண் குழந்தை (பிறந்திருப்பது) பற்றி நற்செய்தி சொல்லப்பட்டால், அவரது முகத்தில் கருமை கவ்விக் கொள்கின்றது! துக்கத்தால் அவர் தொண்டை அடைத்துக் கொள்கிறது. இந்தக் ‘கேவலமான’ செய்தி கிடைத்துவிட்டதே என்பதற்காக இனி யார் முகத்திலும் விழிக்கக்கூடாது என்று மக்களைவிட்டு ஒதுங்கிச் செல்கின்றார். அவமானப்பட்டுக் கொண்டு அப்பெண் குழந்தையை வைத்திருப்பதா அல்லது அதனை மண்ணில் புதைத்து விடுவதா என்று சிந்திக்கின்றார் பாருங்கள்! இறைவனைப் பற்றி இவர்கள் எடுத்த முடிவு எத்துணைக் கெட்டது!

(திருக்குர்ஆன் 16:58,59)